விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 8

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு கொழும்பு

Phone 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புதுகுரல் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 24உ திங்கட்கிழமை — Colombo, November, 10, 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 26 | இதழ் 60

பரமுலா நகரை இந்திய துருப்புகள் கைப்பற்றின

லார்டு மவுண்ட்பேட்டன் மீது 'டான்' பத்திரிகை புகார்

ஜுனாகத் சமஸ்தான நகரை போட்டி சர்க்கார் துருப்புகள் தாக்கின

புதுடில்லி, நவ 8

இந்தியா பாதுகாப்பு மந்திரி காரியாலய அறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது:-

காஷ்மீரத்தின் தலை நகரான ஸ்ரீநகரிலிருந்து மேற்கே 30வது மைல் தூரத்திலுள்ள பரமுலா நகரை இந்திய துருப்புகள் கைப்பற்றிவிட்டன. இந்திய துருப்புகள் எதிரிகளை மேற்குநோக்கித் தாக்கிச் சென்கின்றன. முன்னேறிச் செல்லும் துருப்புகளுக்கு பக்கபலமாக இந்திய ராணுவ விமானங்களும் செயலாற்றி கொண்டிருக்கின்றன. எதிரிகள் ஓட்டம் பிடிக்கிறார்கள். அவர்கள் ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் போக்கு வரத்து சாதனங்களையும் கைவிட்டுவிட்டு ஓடுகிறார்கள். அவைகளை இந்தியத் துருப்புகள் கைப்பற்றியிருக்கின்றன.

மவுண்ட்பேட்டன் மீது 'டான்' பத்திரிகை புகார்

காரச்சி, நவ. 8

முஸ்லிம் லீக் பத்திரிகையான 'டான்' இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட்பேட்டன் தான் கேரில் நின்று காஷ்மீர் யுத்தத்தை நடத்துவதாக குற்றஞ்சாட்டி எழுதியிருக்கிறது. அது மேலும் கூறியதாவது:— இதற்கு முன்னால் பிரிட்டிஷ் சரித்திரத்தில் அநேகதீமையான செயல்களைப் புரிந்திருக்கிறார்கள். ஆனால் இந்தச் செயல் மிகவும் தீமையானதென சரித்திரத்தில் பொறிக்கப்படும். லார்டு மவுண்ட்பேட்டன் கவர்னர்ஜெனரல் மட்டுமல்ல, இந்தியாவின் பிரதம தளபதியுமாகும். அவர் அக்டோபர் 24 25, 26-ம் தேதிகளில் இந்திய கடற்படை, விமானப்படை, தரைப்படை அதிகாரிகளுடன் கலந்து பேசி காஷ்மீர் யுத்தம் நடத்துகிறார்.

போட்டிச் சர்க்கார்

டான் பத்திரிகை பிரசுரித்துள்ள காஷ்மீர் போட்டி சர்க்கார் அறிக்கை தெரிவிப்பதாவது:- போட்டி சர்க்கார் துருப்புகள் மூன்று பகுதிகளாக முன்னேறுகின்றன. ஒரு கோஷ்டி ஸ்ரீநகருக்கு 5 வது மைலில் முன்னேறியிருக்கிறது. ஒரு கோஷ்டி ஸ்ரீநகர் விமான நிலையம் வரை முன்னேறி எதிரிகளை பின்வாங்கும்படி செய்தது. மற்றொரு கோஷ்டி நடத்தும் யுத்தத்தில் இருதரப்பிலும் பெரும சேதம் ஏற்பட்டது. பூஞ்ச் பகுதியில எதிரிகள் விரட்டப்பட்டனர்.

ஜுனாகத்போர்

பம்பாய், நவ 8

ஜுனாகத் சமஸ்தானத்தில சமஸ்தான துருபடகளுக்கும் போடடி சர்க்கார் துருடபுகளுக்கும் முதன்முதலாக போர் நிகழ்ந்தது என்று ராஜகோட—யிலிருந்து வந்த அறிக்கை தெரிவிக்கிறது. போடடி சர்ககார் துருப்புகள் சமஸ்தானத்திற்கு வெளிபபுறத்திலுளள தீவுகளைக் கைப்பற்றி இருந்தன. சமஸதான மேற்கு எல்லைக்குளளிருநகும் முடியானு நகரை இன்று போட்டி சர்க்கார் துருப்புகள் தாக்கின. நகரின் கோட்டைக்குள்ளிருக்கும் சமஸ்தான துருப்புகளின் எதிர்ப்பு பலமாக இருக்கிறது. இருதரப்பிலும் கொஞ்ச துருப்புகளை இருக்கிறபடியால் இன்னும் முழுமுரமான போர் நடைபெறவில்லை.

(அ-பிரஸ்)

ரோமல் கொலைக்கு உடந்தையாக இருந்தவர் கைது

பிராங்போர்ட், நவ 9

நாஜி ஆப்பிரிக்க படையின் தளகர்த்தராக இருந்த பீல்ட் மார்ஷல் எர்வின் ரோமல் என்பவரின் கொலைக்கு உடந்தையாக இருந்தவர் என்று கூறப்படும் மாஜி லெப்டினன்ட் ஜெனரல் ஏர்னெஸ்ட் மைகேல் என்பவரை போலிஸார் கைது செய்துள்ளதாக அறியப்படுகிறது.

(ராய்ட்டர்)

ஐ. நா. பொதுச் சபையில் கட்டுப்பாடு

விவாதங்கள் சுருக்கமாக ஒரு முறை பேசலாம்

லேக்ஸக்ஸஸ், நவ. 9

ஐக்கிய நாடுகள் சபையில் பிரதிநிதிகள் சுருக்கமாக பேச வேண்டுமென்றும் ஒரு முறையே பொது விவாதங்களில் பேச முடியுமென்றும் ஜெனரல் அஸெம்பிளியில் டாக்டர் ஒன்வால்ட் அரன்ஹா கொண்டுவந்தார். ஜெனரல் அசெம்பளியிலுள்ள பல கமிட்டிகளின் தலைவர்களுக்கும் இவர் அனுபிய கடிதங்களில் அடுத்த ஒரு நாட்களுக்குள்ளாவது தங்கள் வேலைகளை முடிக்குமபடி கேட்டுள்ளார் ஒவ்வொரு நாளும் அலுவலரணி நேரம் முன்னதாக வேலைகளை ஆரம்பிக்கும்படியும் இரவு கூட்டங்கள் நடத்துமபடியும் ஆலோசனைகளை அவர் தெரிவித்துள்ளார்.

இரு ரயில்கள் மோதுண்டன

25 பேர்கள் மரணம்

ஹாம்பர்க், நவ 9

ஹாம்பர்க்கில்டாம்ரோர்எல்லுமிடத்தில் தள பாடங்களை ஏறறி வந்த ரயிலுடன் ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் மோதுண்டதால் 25 பேர் கொலலப்பட்டனர். இப்பாதை சிலமணி நேரம் தடைப்பட்டிருந்தது.

[ராய்ட்டர்]

பட்டாணி ஸ்தானம்

ஆப்கானி ஸ்தானத்தின் கோரிககை

சுதந்திர போட்டி சர்க்கார் நியமனம்

காபூல், நவ 8

சுதந்திரமானபட்டாணிஸதானம் நிறவப்பட வேண்டுமென்று ஆப்கன் சர்க்கார் கோறுகிறது. வடமேற்கு எல்லைப் புற மாகாணம், பலுச்சிஸ்தானபகுதி முதலிய மாகாணங்கள் சேர்ந்து பட்டாணி ஸதானமான ராஜ்யம் நிறவப்பட வேண்டுமென்று அது கருதுகிறது.

இது சம்பந்தமாக சுதந்திர பட்டாணி ஸதான சர்க்கார் ஒன்று கான் முகமது ஜான் தலைமையில் காபூல் நகரில் நிறுவப்பட்டிருக்கிறது. புதுடில்லியிலுள்ள ஆப்கன் ஸதானிகர் இச்செய்தியை ஊர்ஜிதம் செய்தார். பட்டாணி ஸதானத்தை அமைப்பது சம்பந்தமாக பாரபட்சமற்ற பொதுஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று இந்த போட்டி சர்க்கார் பாகிஸ்தான் சர்க்காருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்களாக சமீபததில் டிலலியலிருந்தகான அபதுல் கனிகான் என்னும் ஜால்மே பக்ரூன் தளபதி ஹைதராபாத்துக்குப் புறபபடடுச் சென்றிருககிறார்.

25,000 கூர்க்க துருப்புகள்

ராக்சால், நவ. 9

காஷ்மீர யுத்ததிற்கு 25 000 கூர்க்க துருப்புகளை அனுப்ப உதவி செய்யத் தயாராக இருபதாக நேபாள அதிகாரிகள் இந்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஸ்டாலினுக்கு நேரு செய்தி

சோவியத் புரட்சிக்கு வாழ்த்து

மாஸ்கோ, நவ 9

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹாலால் நேரு சோவியத் ரஷியாவின் அக்டோபர் புரடசியின் 30-வது வருடாந்தக் கொண்டாட்ட வைபவத்தை முன்னிட்டு சோவியத் தலைவர் ஸ்டாலினுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார் (ராய்ட்டர்)

சீன உள்நாட்டு யுத்தம்

பாதுகாப்பு மந்திரி பிரதம தளபதியாகிறார்

நாங்கிங், நவ. 8

யாங்சே மாகாணத்தில் கியூகியாங் பிரதேசத்தில் சீன சாக்கார் துருப்புகளுக்கும் சீன கமியூனிஸ்ட் துருப்புகளுக்கும நடைபெறும் மும்முரமான போராட்டத்தில் பொறுப்பு வகித்து யுத்ததை நடததும் பொருட்டு சீன சர்க்கார் பாதுகாப்பு மந்திரி ஜெனரல் பெய் சுங்ஸி சர்க்கார் துருப்புகளின் பிரதம தளபதியாக கூடிய சீக்கிரம புறப்படடுச் செல்வார் டாப்பி மலைப்பிரதேசத்தில் பலமான தளததை நிறுவி பெரும் போர் நடத்த கமியூனிஸ்—தளபதிகள் முயற்சித்துவருகிறார்கள். முக்டானிலிருந்து 70 மைல் தூரத்திலுள்ள ஆன்ஷான் துருப்புச் சுரங்க பிரதேசம் கமியூனிஸடுகள் வசமாகிவிடடதென்ற செய்தியை மஞ்சூரிய சர்க்கார் மறுக்கிறார்கள்.

(ராய்ட்டர்)

ஜப்பான் யுத்தக் குற்றவாளிகள் விசாரணை

டோக்கியோ, நவ 8

ஜப்பான் யுத்தக் குற்றவாளிகளை விசாரிக்க நிறுவப்பட்ட நீதிமன்றத்திற்கு மேஜர் ஜெனரல் மிரான தலைமை நீதிபதியாக நியமிககப்பட்டிருகிறார்.

[ராய்ட்டர்]

சோவியத் புரட்சியின் 30-வது வருடக் கொண்டாட்டம்

ஸ்டாலினுக்கு எகிப்திய, ஆப்கன் மன்னர்கள் பாராட்டுச் செய்தி

ரஷியாவை உலகிலேயே செழிப்பான நாடாக்க ஐந்து வருடத்திட்டம்

மாஸ்கோ, நவ 8

இன்று சோவியத் புரட்சியின் 30-வது வருட விழாக் கொண்டாடடத்தின் இரண்டாவது தின வைபவங்கள் ஆரம்பமாகும போது விடாது பனி பெய்து கொண்டிருந்தது. லட்சக்கணக்கான மாஸகோ நகரவாசிகள் வீட்டைவிட்டு வெளிவர முடியாதிருந்தது.

வருடாந்த விழாவை முன்னிடடு 'பிரவடா' பதத்திரிகை எழுதியுள்ள தலையங்கததில் பின்வருமாறு தெரிவிக்கிறது:-

சோவியத் சர்க்கார் 5 வருட பொருளாதாரத்திட்டம் வகுத்திருக்கிறார்கள். இத்திட்டம் நிறைவேறின் சோவியத் ரஷியா உலகிலேயே மிகச் செழிப்பான நாடாகிவிடும். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு தங்கள் சொந்த உள்நாடடு பலததில நம்பிக்கையிலலை. அதன் காரணமாக அவர்கள் அணுகுண்டையே நம்பி வாழ்கிறார்கள். திருமொலடோவதனது அறிக்கையில்தெரிவித்திருப்பது போல அமெரிககர் அந்த அணுகுண்டு தங்களுக்கு மடடும் எதிரிக்க பரபரசியம் என்று எண்ணி கொண்டிருப்பது பெரும பிழை

நேற்றிரவு முதல் மாஸகோவில் பனி பெய்ய ஆரம்பிததது. ஆனால நடுங்கும் குளிரையும் பொருட்படுததாமல் நகரின் முக்கியமான சதுக்கங்களில் நடைபெற்ற நடனக் கச்சேரிகளையும், நாடகங்களையும், சங்கீதக் கச்சேரிகளையும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து பார்த்தனர்.

வீதிகள் வழியாக அநேக மக்கள் உற்சாகததுடன் ஆனந்த நடனமாடிககொண்டு சென்றனர் ஸபிடகிட்நவ்க மாளிகையில் சோவியத் அந்நிய நாடடுமந்திரி திரு மொலடோவ் 800 பேர்களுக்கு விருந்தளித்தார் அதில் சோவியத் விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள, நூலாசிரியர்கள், சினிமா நடிகர்கள், சங்கீத நிபுணர்கள், ராணுவ அதிகாரிகள் முதலியோர் கலந்திருந்தனர்.

எகிப்திய, ஆப்கானிய மன்னர்கள், நார்வே, அலபானியா, சயாம், இத்தாலி பிரதம மந்திரிகள் இன்று சோவியத் தலைவர் ஸ்டாலினுக்கு வாழ்ததுச் செய்திகள் அனுப்பினர்.

சோவியத் புரட்சிக் கொண்டாடடம் புககாரஸ் நகரில் நடைபெற்றது. நாங்கிங் நகரிலுள்ள சோவியத் ஸதானிகர் ஆயிரம் விருந்தினருக்கு ஒரு வரவேற்பளிததார். வாஷிங்டன் நகரிலும் சோவியத் ஸதானிகர் ஒரு விருந்தளித்தார். அதற்கு அமெரிக்க அந்நிய நாடடு மந்திரி மார்ஷல் விஜயம் செய்யவில்லை. அவர் காரியாலயததைச் சேர்ந்த சிறிய அதிகாரிகள் சிலர் வந்திருந்தனர்.

ஹங்கேரி கொண்டாட்டத்தில ஸடாலினுககுபுடாபெஸ்ட் பிரஜா பட்டம் வழங்கினர்.

டெஹ்ரானில் சோவியத்ஸ்தானிகர் காரியாலயததில் நடைபெற்ற கொண்டாடடத்திற்கு பரசிக பிரதம மந்திரியோ அல்லது மறறமந்திரிகளோ அழைக்கப்படவில்லை அதே போல டெஹ்ரானிலுள்ள பிரேஸில், கிரீஸ் ஸ்தானிகாகளும் அழைக்கபபடவில்லை.

வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கத்தின் புதிய தலைவர்

தலைவர் பதவியிலிருந்து நீங்கிய திரு. குணசிங்காவுக்கு புரட்சியில் பீதி!

அவர் இடது சாரியுமல்லவாம்! யூ. என். பி.யுமல்லவாம்!

கொழும்பு, நவ. 10

நேற்று மாலையில வர்ததக குமாஸதாக்கள் யூனியன் கூடடம் தொழில் மந்திரியின் பாராளுமன்றக காரியதரிசி திரு ஏ. ஈ. குணசிங்கா தலைமையில் நடைபெற்றது.

தொழிற்சங்கத் தலைமைக் காரியாலயததிற்கு வெளியே ஒரு போலிஸ் "வான்" நிற்பாட்டப் பெற்றிருந்தது. கூட்டத்தில் இடையே கூச்சலும் குழப்பமும் உண்டாயின.

திரு. குணசிங்கா பேசிய பொழுது கூறியதாவது:-

"சென்ற பொதுவேலை நிறுத்தத்தின் போது, வர்த்தகக் குமாஸதாக்கள் குழிதோண்டிப் புதைக்கப்படாமலும், வேலைகளினின்றும் அகற்றப் படாமலும் நான் பாதுகாத்திருக்கிறேன்."

"எனக்கு பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபையில் உப தலைவர் பதவியை கொடுப்பதாகக் கூறினர். நான் அதை ஏற்க மறுத்து விட்டேன். ஆயின் தொழில் மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசிப் பதவியை நான் ஏற்றது சென்ற 35 வருடங்களாக தொழிலாளர் சம்பந்தமாக அனுஷ்டித்து வந்த கொள்கையைப் பலப்படுத்துவதற்குத்தான்."

"நான் இடதுசாரிகளுடன் சேர்ந்து கொள்ள முடியாது. காரணம்? அவர்களால் பாராளுமன்றத்தில் ஒன்றும் செய்ய முடியாது.

"ஆனால் நான் உபமந்திரியாக விருந்தாலும் யூ என் பி கட்சியின் அங்கததவனல்ல என்பதை உங்களுக்குத் தெரியபடுததுகிறேன். நான் ஒருவருக்குபபந்தம் பிடிப்பவன அல்லன் எனது "பந்தம்" வர்த்தக குமாஸதாககள் அழிந்தொழியாது வெளிச்சத்தைக் கொடுக்க ஏதுவாகவுள்ளது.

சென்ற பொது வேலை நிறுத்தத்தின்போது என்கைக்கு ஒரு அறிக்கை கிடைததது. அவ்வறிக்கை செக்கோஸலோவாக்கியப் புரடசியையே எல்லா அப்ஸங்களிலும் ஒததிருந்தது இவ்வறிக்கை இடதுசாரிகளால தான் வெளியிடப்பட்டதாகும் அரசாங்கத்தை விழுத்துங்கள் என்று அதில் எழுதியிருப்பதை நான் நினைக்கும்போது எனதேகம் பயிர் குச்செறிகிறது நா தடுதடுக்கின்றது."

திரு ஜே. ஸி. வி ஹொல்ஸங்கர் அடுத்த வருடத் தலைவராக நியமிககப்பட்டார்.

வருடாந்த அறிககையும் கணகககுகளும் சபையில் சமர்பிககப்பட்டபோது, சபையார் அதை ஏற்க மறுத்து விடடனர்.

4,00,000 வருடங்களுக்கு முந்திய யானை

கரிச் சுரங்கத்தில் எலும்புக்கூடு

மிலான், நவ 9

மிலானில் இருந்து சுமார் 40 மைல் வடகிழக்கிலுளள பேகமோ என்னுமிடததில உள்ள ஒரு கரிச் சுரங்கத்தில் சரிததுநாலத்துக்கு முற்பட்ட ஒரு யானையின் எலுமபுக்கூடு கண்டுபிடிக்கப்பட்டுளளது. இந்த எலும்புக்கூடு 12 அடி உயரமுடையதாகவும் அதன் தந்தங்கள் சுமார் 9 அடி நீளமுளளவைகளாகவும் இருக்கின்றன. இதனை ஆராய்ச்சிசெய்த பேராசிரியர் ஸர். கியோ வெனிஸா, இந்த யானை எலும்புகூடு சுமார் 4,00 000 வருடங்களுக்கு முந்தியதென அபிபிராயப்படுகிறார்.

பர்மிய மக்களுக்கு காந்திஜி பாராட்டு

ஆசிய தொழிலாளர் மகாநாடு முடிவுற்றது

அடுத்த வருட மகாநாடு சீனத்தில் நடைபெறும்

புதுடில்லி, நவ. 8

ஆசிய தொழிலாளர் மகாநாடடுக்கு வந்திருந்த பர்மா பிரதிநிதிகள் இன்று இந்தியாவிலுள்ள பர்மா ஹை கமிஷனர் உவின் தலைமையில் போய் மகாதமா காந்தியைச் சந்ததனர் அவர்களிடம் மகாதமா பின்வருமாறு தெரிவிததார்:-

பர்மா பூரண சுதந்திரமடையது குறித்து நான் பர்மிய மக்களைப் பாராட்டுகிறேன். இந்தியா அடைந்துள்ள சுதந்திரததைவிட மேலான சுதந்தரம் பர்மா அடையப்போகிறது. பிரிடடிஷ் பாராளுமன்றததில் வின்ஸ்டன் சர்ச்சில் பர்மாவைக் குறித்து பேசியதற்காக நீங்கள் ஆததிரமடையலாகாது. அதற்குப் பதில் அவர் பேச்செலலாம் புளுகு என்பதை நீங்கள் உங்கள் செயலால் நிரூபித்துக் காண்பிக்க வேண்டும

திரு. என். எம் ஜோஷி எச்சரிக்கை

இன்று ஆசிய தொழிலாளர் மகா நாட்டின் கடைசி நாள் கூட்டததில் இந்தியாவின் பிரல தொழிலாளர் தலைவரான திரு என் எம். ஜோஷி பேசிய பொது பின்வருமாறு தெரிவிததார்:-

உலகப் போக்கின்படி நடக்க தங்கள் அரசாங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் போதிய அவகாசமளிகக ஆசிய தொழிலாளர்கள் தயாராக இருககிறார்கள். ஆனால் ஆசிய மககள் நிரந்தரமாக வாழ்க்கைததரம் குறைவுற்றிருக்க அவர்கள் சகிததுககொண்டிருக்கமாட்டார்கள்

1949ல் சைனாவில் நடைபெறும் அடுதத ஆசிய தொழிலாளர் மகாநாடடில, சர்வதேச வாழ்கைகைத்தரத் திட்டததிற்கேற்ப ஆசிய நாடுகள் தேசியக திட்டம் தயாரித்து சமர்பிக்க வேண்டுமென இன்று தீர்மானம நிறைவேறறப்பட்டது.

6 வாரங்கள் நடைபெற வேண்டிய வேலைகளை மகாநாடு இரு வாரங்களில் முடிததுவிட்டதுபற்றி சர்வ தேச தொழிலஸ்தாபன நிர்வாகக் கமிடடி தலைவர் சர் இவான்ஸ் பாராட்டினர்.

தொழிலாளர் பாதுகாப்பு சம்பந்தமாக சர்வதேச திட்டத்திற்கேற்ப நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேணடுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல நாடுகளிலுமிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் மகாநாட்டுத தலைவரான இந்தியா தொழில் மந்திரி திரு. ஜகஜீவன்ராமின திறமையைப் பாராட்டினர்கள்.

பொதுச் சொத்துக்களை திருடிய மேஜர்

6 மாதச் சிறைத் தண்டனை

பாரிஸ், நவ. 9

பொதுச் சொத்துகளைக் களவெடுததததாக குறறஞ் சாட்டப்பட்ட மேஜர் அலபரெட் வேவல் என்பவர் பிரிட்டிஷ் இராணுவ கோர்ட்டில் விசாரிககபபடடு ஆறு மாதச் சிறைத் தண்டனை வதிக்கப்பட்டார்.

(ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ச, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.
ச்வஜித்து ஷு ஐப்பசி மீ 24உ
திங்கட் கிழமை

நிலைமை தெரியாத பேச்சு!

மானமே உயிரினும் சிறந்ததென்பது தமிழன் கொள்கை 'மானம் அழிந்த பின் வாழாமை முன் இனிதே" என்றார் ஒரு தமிழ்ப் புலவர். எனவே, மானங்காத்த வீரனை மனமாரப் போற்றும் வழக்கம் தொன்று தொட்டுத் தமிழ் நாட்டில் உண்டு. நாட்டின் மானத்தைக் காத்த வீரன் ஒருவனுக்கு "மானங்காத்தான்" என்று பட்டம் சூட்டிய நாடு தமிழ் நாடு. இத்தகைய மான வீரரின் சந்ததியில் வந்த ஒரு தமிழன் சென்ற வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அவர்தான் அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர், திரு. கெ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை. கம்பர் வழாவக்குவந் வர்சிறி அரசியலிலும் இறங்கினார். இங்குள்ள தமிழர்க்கு ஒரு ஆங்கிலப்பத்திரிகை மூலம் ஒரு செய்தியும் விடுத்துள்ளார். தமிழர் பிரிந்திருக்கக் கூடாது. சாதி சமயவேறுபாடு கொண்டு பிரிந்திருக்க வரும்பும் எந்தத் தமிழருக்கும் அனுதாபம் காட்ட முடியாது. சாதிதிர காலந்தொட்டு தமிழன் சர்வதேச நோக்கத்துடன் வாழ்ந்து வந்திருக்கிறான். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தமிழன் அனுபவித்து வந்த கொள்கை என்று தான் திரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் பணி மொழிகள்.

நல்லதுதான்! தமிழர் பிரிந்திருக்கக் கூடாது. ஆனால் எந்த தமிழன் பிரிந்திருக்க விரும்பப்படுகிறான்? இலங்கை இலங்கையருக்கே – இலங்கையர் யார்? சிங்களவர்தான் என்பதே இன்றைய சிங்கள பத்திரிமாரின் கொள்கையாயிருக்கின்றது. இந்நாட்டில சிங்களவர், தமிழர், பறங்கியர் ஆகிய மூ பெருமச்சமூகங்களும், வேறும் பல ஜாதியினரும் வாழ்ந்து வருகின்றனர். சிங்களவர் பெருப்பான்மை மக்கள். பற்றவர்கள் சிறுபான்மை மக்கள். பெரும்பான்மைச் சிங்களவர் மற்றும் சிறுபான்மையருடன் ஒற்றுமையாக வாழ விரும்புகிறார்களா? இலங்கை அரசியலில் தக்க பங்கு கொடுக்க விரும்புகிறார்களா? இல்லவே இல்லை. சென்ற 16 வருடங்களாக சர்வ சிங்கள மந்திரி சபை அரசியலிலிருந்தது. அகவிலாகதில் மிழர் ஏதாவது நன்மை பெற்றனரா? தமிழ் மக்கள் ஒடுமிடனர். அப்பொழுதாவது விடுக்கொடுக்குதாளபுதக சிங்கள அரசியல் வாதிகளுக்கு வந்ததா? இல்லை. மீண்டும் ஸோல்பரித் திட்டத்தின்படி ஏற்பட்ட பாராளுமன்ற சபையிலாவது தமிழருக்கு ஏதாவது சலுகை செய்தனரா? முண்டாசு கட்டிய இரண்டு கொண்டி வீரப்பன்களுக்கு இரு மந்திரிப் பதவிகளைக் கொடுத்ததல்லாமல் அவர்களின் புதியும் சித்தபுப் பாறவில்லை.

தமிழனை அண்ட விடுவது புத்தியல்ல என்பதே இன்று சிங்கள மந்திரிகள் செய்துவரும் பிரசாரமாகும். கடைசி இந்தியன் இலங்கைக் கரையைவிட்டு அகலும் போததான் தான் நிம்மதியாக இறப்பதாகச் சபதமிட்ட மந்திரியும் ஒரு சிங்கள மந்திரிதான். இன்னுமொரு சிங்கள அரசியல்வாதி சிங்களமே அரசியல் பாஷையாக இருக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தார் அரசாங்க சபையில் இப்பொழுது சிங்களவர் கொடியாகிய சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக்க முனைந்துகின்றனர். இந்த நிலைமையில் தமிழர் பிரிந்திருக்க எவ்வாறு துணிக்கின்றனர் மானம் அழியப்போகும் நிலையை வரைச்சும் தமிழர் பொறுமையாகத் தாராள மனப்பான்மையுடன் ஒற்றுமையாகத்தான் வாழ விரும்பியிருக்கிறார்கள் ஆனால் அந்தச் சமயத்தில் நாம் ஒன்று ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

பழைய காலத்தில் ஒரு திருமணப் பந்தலில் ஆரியர் மன்னாலர் குழுமியிருந்தனர். அவர்களுள் கனகன், விசயன் என்ற இருவர் தமிழரசரைக் குறித்து அசதியாடினர். "தமிழ்நாட்டரசர் படையெடுத்து வந்து, இமயமலையில் வில்லும், புலியும், கயலும் பொறித்த நாளில் எமமைப் போன்ற வீரசூர வேந்தர்கள் இந்நாட்டில் இல்லைபோலும்" என்று பேசி மகிழ்ந்தார்கள். வட நாட்டினின்றும் வந்த மாதவர் வாயிலாக அவ்வசை மொழியைக் கேட்டான் சேரன் செங்குட்டுவன். அவன் கண் சிவந்தது. கரம் துடித்தது. "இன்றே வடநாட்டின் மேல் படையெடுப்பேன். தமிழரசரைப் பழித்துச் சிறுமைப்படுத்திய மாற்றாரைச் சிறைபிடிப்பேன். பத்தினியாகிய கண்ணகிக்கு இமயமலையிற் சிலை எடுப்பேன், அதனை அவ்வரசர் தலையில் ஏற்றி வருவேன்" என்று வஞ்சினம் கூறி எழுந்தான். அவர்களைச் சிறைபிடித்தும் வந்தான். தலையில் கல்லும் ஏற்றி வந்தான்.

ஏளனம் பண்ணியதற்காக தமிழரசன் அவர்களைச் சிறைபிடித்தது உச்சியில் கல்லேற்றினான். ஆனால் திரு. மீனாட்சி சுந்தரம்பிள்ளை "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று இருக்கும்படி தமிழருக்குப் புதுமதி கூறுகின்றார் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. விஷயம் தொரியாது வாயில் வந்தபடி பேசுவரை நாம் எவ்வாறு கூறுவது? உளறுவாயன் என்றுதான் கூறவேண்டும். மானத்துடன் தான் இம் மொழியைக் கூறியிருக்கமாரா எம் விதத்தால்? யாதும் ஊரென்று மானமற்று இரந்து உண்பதைதா தரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் கூறுவீர். அது தமிழன் பண்பிலில்லை

ஆனால் ஒன்று, இதற்காக நாம் சங்கள ஸ்தானம், தமிழ் ஸ்தானம் ஏற்பட வேண்டுமென்று விரும்பவில்லை. அடியோடு ஒன்றை சிங்கள அரசியல் வாதிகள் தான் ஏற்படுத்த முனைந்து நிற்கிறார்கள்என்பதை மறவாதீர். மீனாட்சிசுந்தரம் அறிந்து கொள்ள வேண்டும். ஆழமறியாது காலை வடுவது நல்லதல்ல!

நீர்வீழ்ச்சி மின்சாரத்திட்டம்

முதல் பகுதி 1950-ல முடிவடையும்

கொழும்பு, நவ. 9

இலங்கைக்கு நீர்வீழ்ச்சி மின்சாரதிட்டம் ஒன்றல்ல பல வேண்டுமென்று போசுகு வரத்து மந்திரி கர்னல் கொதலவல தெரிவிக்கின்றார் இ பொழுது நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் நடைபெறும் நீர்வீழ்ச்சி மின்சாரத திட்டத்தின் முதல் பகுதி வேலைகள் 1950-ம் வருட முற்பகுதியில் முடிவடையுமென்றும் அவர் தெரிவிக்கின்றார்.

இப்பொழுது கொழும்பு மின்சார சக்திக்கு அதிகம் பேர் வேண்டுமென்று பிரதிருப்பதாகவும் வீடடபைப்புத திட்டப்படி 10000 புதிய வீடுகள் அமைக்க படவேண்டியிருப்பதாகவும் மொக்காவில இந்து புதிய இந்ரமொன்று இலங்கைக்கு வருவதாகவும் அவர் தெரிவக்கின்றார்

மேலும் நோட்டன் பிரிட்ஜ் வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் எல்லாரும் வேலைக்கு ஒழுங்காக வந்து வேலை செய்வதற்காக ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும்படி அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்துள்ளதாகவும் இந்திட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் கூடிய விரைவில் வேலைகளைச் செய்து முடிக்க சபதம் எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் கவர்னர்கள்

55 வது வயதில் ஓய்வுச் சம்பளத்துடன் விலகலாம்

லண்டன், நவ. 8

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலோ, பர்துகாப்பு நாடுகளிலோ உள்ள கவர்னர்கள் 60வது வயதில் ஓய்வுச் சம்பளம் பெற்று விலகலாம் என்பது இப்பொழுதுள்ள சட்டம் இனி 55 வது வயதிலேயே விலகலாமென்று புதிய சட்டம் இன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது (ராய்ட்டர்)

பண்டைத் தமிழ் நாட்டின் பழம்பெரும் கவிஞன்

சொக்குகின்ற கர்வியத்தில் தொன்மைத் தமிழரின் தூய பண்புகளைச் சித்தரித்த கம்பன்

உயர்ந்த இலட்சியங்களையெல்லாம் ஒன்றுதிரட்டி உருவாக்கி தமிழருக்கீந்த ஞானவள்ளல்

தமிழ் இலக்கிய உலகிலே தர்ம இராஜ்யத்தை நிறுவிய தண்டமிழ் கவியரசு

(கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள்
இலங்கைப் பல்கலைக் கழகப் பேரசிரியர்)

மாயவரம் தாலூகா என்று இப்பொழுது அழைக்கப்பெறும் திருவழுந்தூர் நடடிலே மூவலூர் என்னும் ஊரிலே கவிச்சக்கிரவர்த்தி ஆகிய கம்பநாடாழ்வார், ஆதிதர் என்பாருக்கு அரும்புதல்வராய்ப் பிறந்தருளினர். அவரின் சிறுபிராயத்திலேயே அவர் திறமையைச் சரராமன் என்னும் மறுபெயர் பூண்டவரான சடையப்பவள்ளல் என்பவர் கண்ணுற்றார். அதன் பின் அவரை ஆதரித்து வந்தார். கம்பர் பெருமானை அக்காலத்து அரசுபுரிந்த சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் தமது அவைப் புலவரில் ஒருவராக அமைத்திருந்தான். இவ்வரசன் காலம் கி பி. 1133-1150என்று ஆராய்ச்சிவல்லார் கணக்கிடுவர் ஒட்டக்கூத்தர், சேக்கிழார் முதலிய புலவர்களும் இவ்வரசன் அவைக்களத்தை அலங்கரித்தவராவர். இவ்வரசனை அனபாய சோழன் என்று அழைப்பதும் உண்டு.

இவ்வாறு சோழ நாட்டின் ஒரு கூறாகிய திருவழுந்தூரில் பிறந்து ஓங்கிய கம்பர் பெருமானை அந்நாட்டுக்குப் பெருந்தூரத்திலேயுள்ள ஈழநாட்டில் பாம ஒன்று கூடி அப்பெருந்தகைமையாரின் விழுமவை ஏன் கொண்டாடவேண்டும்? அப்பெரியார் இல்காப் புலமையாப்ந்தவர் ஆகையினாலே, கற்றோர்க்குத் தாழூர் பிறிதூர் என்ற பேதம் இல்லை என்னுங்காரணத்தாலே, சோழ நாட்டிற் பிறந்தாலென்ன, அவர் தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் அற்றிய தொண்டின் பெருமையினால், அவர் விழாவை ஈழநாட்டிலும் கொண்டாடுதல் தமிழ் மக்கள் கடன் என்பது ஒருதலையாயினும் பிறிதொரு காரணமும் உண்டு. அவர்காலத்திலே சோழநாட்டுக்கும் ஈழநாட்டுக்கும் அருகுங்கிய தொடர்பு இருந்து வந்தது. அதனாலே அவர் தமது இராமாயணத்தில் எடுத்துக் கூறிப் போந்த கலாச்சாரம், பண்பு முதலிய வற்றிற்கும் தமது கலாச்சாரம் முதலியவற்றுக்கும் தொடர்பு உண்டு. அக்காரணத்தாலும் கம்பர் பெருமானின் இராமாயணத்துக்கு எமக்கும் உரித்து உண்டு. மேலனில் எங்கள் பழைய கலை முதலியவற்றையும் கலாச்சாரத்தையும் ஒருவாறு கம்ப இராமாயணம் காட்டுகின்றது.

கம்பநாடர் சோழ அரசர் அவைக்களத்தை அலங்கரித்த ஒரு மகாகவி, அப்புலவர் பெருமான் தமது அறியாப் புகழ் பெற்ற இராமாவதாரம் என்னும் தொடர்நிலைச் செய்யுளில், தமது பிறப்பிடமும் வாழிடமும் ஆய சோழநாட்டையும், அது அற்றை நாட்களில் அடைந்திருந்த உயரிய கலை, கேள்வி, கலாச்சாரம், புகழ், கொடை, கீர்த்தி முதலிய யாவற்றையும் அழகு பெறக் கற்றோரும் மற்றோரும் சுவைத்தின்புறுமாறு சித்திரித்துக் காட்டுகின்றார்.

அன்றியும், கி. பி 7-ம் நூற்றாண்டு தொடக்கம். ஆரியக் கலையும், ஆசிரியக் கலாச்சாரப் பண்புகளும் தமிழ் நாட்டில் படிப்படியாய் வந்து வேரூன்றி விட்டன. அதனாடு புத்தம், சமணம் முதலிய சமயங்கள் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்த தெய்வமில் கொள்கையும், பல்லவ மன்னர் தமிழ் நாட்டில் ஆதிக்க முற்றிருந்தபோது சைவநாயன்மார், வைணவ ஆழ்வார் முதலியோரால் ஒருவாறு வீழ்ச்சி யடைந்தது. ஆனால், 9-வது நூற்றாண்டு தொடக்கம். சோழ சாம்ராச்சியம் உன்னதநிலை அடைந்ததும், அத்தெய்வமில் கொள்கை அடியோடு நிலை குலைந்து விட்டது. நாட்டிலுள்ளார் யாவரும் செய்வ வழிபாடு காரணமாக, சிவனை வழிபடுவோரும் திருமாலை வழிபடுவோருமாக இருபகுதியார் ஆகிவிட்டனர். அக்காலத்திருமுன் சைவ காவியங்களும் வைணவ காவியங்களும் தமிழில் அதிகமாய் ஆக்கப்பெற்றன. சேக்கிழார் சுவாமிகளின் பெரிய புராணமும் இக்காலத்தேதான் மொழியில் ஆகிகாவியம் என வழங்கவதும் திருநாராயணமாதவியின் திருவவதாரங்களில் ஒன்றாகிய இராமாவதாரத்தைக் கூறும் ஆதி கவியாகியவான்மீகி முனிவர் செய்த இராமாயணம் திருமாலின் பத்தியில் ஈடுபடோர் யாவராலும் சுவைக்கப்படு வந்தது. அந்தக் காலம் வரையும் அது வடமொழியில் வரிசித்து வடமொழி வல்லுநரால் தமிழில் பெயர்த்து விரிவுரை நிழ்த்தப்பட்டு வந்தது ஆனால், சோழ சாம்ராச்சியம் அதிக்கம் அடைந்தகாலத்து தமிழ்நாட்டு மக்கள் வடமொழியை ஈடுபட்ட காலம்போய், தமிழில் அதைக் கேட்டுச் சுவைத்து இன்புறும் காலம் வந்துவிட்டது. அதாவது கல்வி பண்டிதக் குழவினர் கையை விட்டகன்று பாமரர் கைக்குள் வந்துவிட்டது பாமரர் விளங்கிக்கொள்ளும் மொழி வடமொழியன்று, தமிழ்மொழி அக்காரணத்தாலே, வடமொழியிலுள்ள சமய சம்பந்தமான நூல்களை பெல்லாம் சமய வளர்ச்சியின் பொருடடு தமிழில் ஆக்கவேண்டி வந்தது. அதனால், வடமொழியிலுள்ள இராமாயணத்தைத் தமிழில மொழி பெயர்க்காதது ஒரு பெருங்குறை என அக்காலத்துப் பெரியோர் கண்டனர். கம்பநாடர் வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் சிறந்த வல்லுநரும் கவியாற்றும் வன்மை படைத்தவருமாய் இருந்தமையின், அவரையே அப்பணியைச் செய்து முடிக்கும் வண்ணம் கேட்டனர். அவரும் அதற்கு இசையைந்தருளினர். வடமொழி இராமாயணத்தைத் தமிழில் ஆக்க முனைவந்தார். சில காலத்துள் ஆக்கி முடித்தார். ஆனால், அவர், வடமொழி இராமாயணத்தைத் தமிழில் ஆக்கிய வகை மிக வியப்பைத் தருவது

சோழ சாம்ராச்சியத்தின் உன்னதமான காலமே அவர் வாழ்ந்த காலம் என்று முன்னே கூறினோம். அன்றியும், அவரை ஆதரித்த குலோத்துங்கனுக்கு முன்னே சோழ சாம்ராச்சியத்தை நிலைநாட்டிய அவன் முன்னோனாகிய இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் வரலாறும் அவர் வீரமும் அறமும் கம்பர்பெருமான் நன்கு அறிந்திருந்தார். அதனால், வடமொழி இராமாயணத்தைத் தமிழில் சொன்னால், அதற்குள் வைத்துச் சோழ மன்னர் பெருந்தகைமையினையும், வீரத்தையும், கீர்த்தியையும் புனைந்துவிடலாம் என்று எண்ணினார் போலும். அக்காரணத்தாலே தான, அவர் யாத்த இராமாயண நூலில் வருணிக்கப்பட்ட நாட்டு வளம், நகர வளம் முதலியவற்றில் சோழ நாட்டையே வருணித்திருக்கின்றார். அயோத்தி, மிதிலை என்பதெல்லாம் பேரளவிலதான். கம்ப ராமாயணத்தில் வரும் மக்கள் யாவரும் சோழ நாட்டு மக்கள். அங்கு காணும் கலாச்சாரம், பண்பு, அறம் முதலிய யாவையும் அந்நாட்டுக் குரியவையே. அது மட்டுமா, அந்த வரும் கதாநாயகன் இராமபிரான். அவர் பண்பு, செயல் யாவையும் உத்தம தமிழன் ஒருவனின் பண்பும் செயலுமே வடநாட்டு ஆரிய ஆண் மகனையோ அன்றி வான்மீகி கூறிய இராமனையோ போன்றவன் அல்லன் அல்லாமலும், வேறுமொரு விசித்திரத்தைப் பாருங்கள். அவரை ஆதரித்த குலோத்துங்கன் முன்னோனான இராசேந்திர சோழன் கடல் கடந்து தன் படையுடன் இலங்கைக்கு வந்தான் போர் நிழ்த்தினான். தன் வீரத்தினால் அங்குள்ள அரசரை வென்று நாட்டைப் பிடித்தான் சேழர் கலாச்சாரத்தையும், கலையையும் நிறுவினான். அது போலவே அக்காலத்து இராமனும் படையுடன் வந்து இலங்கையிற் போர் நிகழ்த்தி நகரில் உள்ளார் ஒரு வகையாய்ப் பொது உடைமைக் கட்சிசைச் சேர்ந்த மக்கள் ஆகையால், சண்டையேது, சச்சரவேது, பொய், களவு முதலிய தீமைகள் அங்கு வருவதற்கிடமேது?

ஓர் ஊரிலுள்ளோர் அல்லது ஒரு தேசத்துள்ளோர் மற்ற ஊரிலோ அல்லது தேசத்திலோ உள்ளவர்களினது பொருளை வௌவுதலானன்றோ வருகின்ற உலகில் எழும் பகை, கொலை முதலியன. அப்பகையாலன்றோ சாதுரிய விற்பன்னர் மக்களை அழிபடுதற்கு புதுப் புது வழிகளை மட்டுமன்றி, இப்பூவுலகையும் ஒரு கை பார்ப்பதற்கு அணுக்குண்டு செய்யவிலும் காலுதலை வீணாக்குகின்றனர். ஆனால், கம்பர்பெருமான் காட்டிய உலகைப் பார்த்து அது போன்று மாந்தர் ஒழுகுவரேல் இவ்வழிவுகள் ஒன்றும் மாந்தருக்கு ஏற்படா. அவர் யாவரும் ஒரு குடும்பத்தவர்போல இன்பமாய் வாழ்வர். அந்த நாள் இந்த உலகற்கு வருவது எந்த நாளோ."

தமிழ் நாட்டிலே வாழ்ந்த புலவர்களுள் இருவர் முக்கியமானவர் ஒருவர் கம்ப நாட்டாழ்வார்; மற்றவர் சுப்பிரமணிய பாரதியார். இருவரும் கவுலகிலேயே சஞ்சரித்தவர்கள் பாரதியார் தமது நாட்டின் அடிமைத்தனையைக் கண்டார். வருந்தினார். ஆத்திரங் கொண்டார் தமது மக்களை தம் வயப்படுத்தி ஆவேசமுறுத்துவதற்கு செந்தமிழ்ப் பாடடுகளைப் புனைந்தார் மக்கள் அவர் வயம் ஆயினர். அடிமைத்தனை நீங்கியது. காசியில் புலவர் பேசும் மொழியை காஞ்சியில் கேடக முடியுமோ என்று கனாக் கண்டார். இப்பொழுது அதுவும் கேட்கின்றது. பாப்பானை ஐயரென்ற காலமும் போயது; வெள்ளைப் பறங்கியரைத் துரையென்ற காலமும் போயது. எங்கும் சுதந்திரம், எல்லோரும் சமம். இவ்வெற்றியை எங்கு கொண்டு ஊதித் தரணியெல்லாவற்றிற்கும் இப்போது சாற்றுகின்றனர். ஆனால் கம்பர் பெருமானோ பாரதியார்போல தீவ வெறிய குறிக்கோளுடன் உயிர் வாழ்ந்தவர் அவரது உயரிய மனக் கருத்துக்களையும் குறிக்கோள்களையும் இராமாயணத்தில் எங்கெங்கும் பரவக் காணலாம் பகை, மிடி, இல்லாததும் உலக மக்கள் எல்லாம் ஒரே குலம் என்ற எண்ணக் கருத்துகளும் இனியாவது உலகில் பரம்புமோ?

உலகில் கம்பநாடன் கண்ட பேரின்பம் பெருகுமோ? அவன் அன்புடன் பெருக்கியளம் அருயிர் மொழியாகிய தமிழ், தமிழக் கலை வளங்களும் பெருகுமோ? அறியேன். அன்பாகளே! அவன் வளர்த்த தமிழ்க் கலையைப் பெருக்கித் தமிழ் உலகை நிறுவி, தமிழ்க் கலாச்சாரத்தையும் அதில் பொதிந்துள்ள அன்பையும், அமைதியையும் உலகிற்கு எடுத்துப் புகட்டி கீழ்ன வழிகளால் போதும் உலகினரை வாழ வைத்தல் உங்கள் கடன்.

இந்தோனேஷிய நிலைமை

குடியரசுத்தலைவர் பிரசங்கம்

பட்டேவியா, நவ 8

இன்று இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்ணோ தேசமக்களுக்கு ரேடியோ மூலம் கீழ்க்கண்ட செய்தி விடுத்தார்:- பாதுகாப்பு கவுன்சில முடிவுகள் இந்தோனேஷிய மக்களுக்கு பூரண திருப்தி அளிக்க வல்லவை. என்றாலும் அவைகளின்படி நடப்போம் இது விஷயதில் மக்கள் ஆத்திரம் கொள்ளாமல் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும். உலகின் கவனத்தை முன்வைத்து குடியரசு தனது சுதந்திரத்தை நிலைநாட்டும். போராட்டம் நிறைவல்லையானால் மூவர் தமிழன் தலைநகருக்கு விஜயம் செய்தால் பலனில்லை டச்சு சர்க்கார் பாதுகாப்பு வுஸ்லி குழு பகை உடுபடுண்ணுவதுடன் தங்கள் பிரிதாளும் கொள்கையை அனுஷ்டித்து வருகிறது.

புதிய மந்திரி

ஹேக், நவ 8

பட்டேவியாவிலுள்ள டச்சு கிழக்கிந்திய சர்க்காரின் நிதிமந்திரியாக இருந்த திரு கோட்சன் டச்சு மந்திரி சபையில் ஒரு மந்திரியாக நியமிக்கப் படடிருக்கிறார். இவர் இந்தோனேஷியாவன் பொருளாதார விவகாரங்களில் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு உதவியாக இருந்து வேலை செய்வார். (ராய்ட்டர்)

இளவரசு தம்பதிகள்

கொழும்பு, நவ. 9

இந்தோனேஷியாவிலிருந்து ஹாலந்து செல்லும் ஓரஞ்சு என்ற கடபல் நேற்றுகொழும்பு துறைமுகத்தில் வந்துதங்கியது அதில கோயடடை 21 வயது உள இளவரசு அதின் கிராடும் அவரது மனைவி இளவரசி ஐதாவும் இருந்தனர். இளவரசு படிப்புக்காக ஹாலந்து செல்கிறார். அங்கு 2 வருடகாலம் தங்கியிருப்பார்.

இந்தோசைனா நிலைமை

அன்னாம் மாஜி மன்னருடன் மந்திராலோசனை

பாரிஸ், நவ. 8

இப்பொழுது ஹாங்காகிலிருக்கும் அன்னாம் மாஜி மன்னர் பாவோடாவுடன் கொச்சின் சைனா மாஜி பிரதம மந்திரி டாக்டர் ஹோச் மந்திரிசபையை நடத்துவிட்டு சைகோன் திருப்பி வந்தார். வியட்நாம் (இந்தோசைனா) தேசிய இயக்கம் ஐக்கியமாக பாவோடாவுடன் திருப்திகரமான சம்பாஷணை நடத்தியதாக அவர் தெரிவித்தார். (ராய்ட்டர்)

எகிப்து மந்திரி சபை திருத்தி அமைக்கப்படு

சூடான் அரசியல் சீர்திருத்தக் கமிட்டி

கெய்ரோ, நவ 8

அடுத்த புதன்கிழமை எகிப்து பாராளுமன்றகூடன் 23 வது கூட்டமாகடைபெறும். அபபொழுது எகிப்து மந்திரி சபை திருத்தியமைக்கப்படு மென்று தரிகிறது. நிதி மந்திரி பாதர் பாஷாவுக்கு பதவி இருக்காதென்று தெரிகிறது.

சென்ற 24 மணி நேரத்தில் எகிப்தில் காலராவால் 189 பேர்கள் மாண்டனர் 566 பேர்கள் தீடிக்கப்பட்டனர்.

இன்று எகிப்து சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தைப் பிரசுரித்திருக்கிறது. சூடான் ஒன்றைய அரசியல் அமைப்பை திருத்தி அமைப்பதற்கு பிரிட்டன, எகிப்து, சூடான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு அரசியல் சீர்திருத்த விசாரணைக் கமிட்டி நியமிக்க வேண்டுமென்றும் எகிப்தின் மேலாதிக்கத்திற்கு பங்கம் ஏற்படாத முறையில் சூடானுக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்கப்படவேண்டுமென்றும் அக் கடிதத்தில் கோரப்பட்டிருக்கிறது. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களப் பத்திரிகை எழுதுவது:

ஏகாதிபத்திய தாசர்களுக்கு ராஜபோகம்

யூ. என். பி. அரசாங்கத்தின் ஊதாரித்தனமான செலவு

இதுதான் குடியேற்றநாட்டு அந்தஸ்தென்றால் இலங்கை குடிமுழுகிப் போகும்

நேற்று முன் தினம் மாலை வெளிவந்த 'லங்கா தீப' ஆசிரியத் தலையங்கத்தின் சுருக்கமான தமிழாக்கம்:

கூடிய சீக்கிரம் இலங்கை இன்சால்வெண்டாகிவிடுமோவென்ற பயப் விஷயம் தெரிந்தவட்டாரங்களில் நிலவுகிறது. இலங்கை மட்டுமல்ல; உலக பொருளாதார நெருக்கடியை உற்றுக் கவனித்தால் அப்பயம் எண்ணுவதற்கு தக்க ஆதாரங்கள் இல்லாமலில்லை. மிகவும் அத்தியாவசியமான வேலைகளுக்குக் கூட சிக்கனத்தை கண்டிப்பாகக் கையாள வேண்டுமென்பதை எவருமே ஆமோதிப்பார்கள். எனவே தேசமக்களின் பொதுப் பணத்திற்கு பொறுப்பாய் உள்ளவர்கள், பொதுப் பணத்தை எவ்விதம் செலவு செய்கிறார்களென்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய காலம் இதுதான்.

சில வருடங்களுக்கு முன் ராணி மாளிகை, கவர்னர் வாசத்திற்கு தகுதியற்ற நிலையில் இருந்தபோழுது, புதிதாய் ஒரு ராஜ மாளிகையை கட்டுவதற்கு திட்டம் போடப்பட்டு அதற்காக பணமும் ஒதுக்கப்பட்டிருந்தது. அக்கட்டிட வேலையை ஆரம்பிக்க தயாரான பொழுது, உடனே அன்றுள்ள கவர்னர் [ஸர் எட்வர்ட் பைபஸ்] முன் வந்து அவற்றைத் தடுத்து விட்டு ராணி மாளிகையை சிறிது சீர்திருத்தி விட்டால் மாதிரம் போதுமென்றும், அது வரைக்கும் தான் ஒரு கூலி வீட்டில் வாசம் செய்வதாகவும் சொன்னார். அதன் பின் கவர்னர் கறுவாக் காட்டில் ஒரு வீட்டில் வாசம் செய்தார்.

எங்கள் பிரதம மந்திரியாருக்கு அரசாங்கத்தால் எடுத்துக் கொடுக்கப்பட்ட வீட்டில் சமீப காலம் வரையும் பிரதம காரியதரிசி வாசஞ் செய்தார். இந்நிலைமையில் அந்த வீட்டிற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்காமல் பிரதம மந்திரியார் வாசஞ்செய்யலாமாக்கொண்டால் அதைப்பற்றி பொது மக்கள் முணுமுணுக்க வேண்டிய அவசியமுமில்லை. எனினும், அந்த வீட்டிற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டிய அத்தியாவசியமான வேலையா? முன்னிருந்த நிலைமையில் இன்னும் சிறிது காலம் அவ்வீட்டில் வாசம் செய்ய முடியாதா? அரசாங்க பொக்கிஷ நிலைமை சிறிது சீர்திருத்தும் வரையும் பிரதம மந்திரியாரின் சொந்த வாசஸ்தலத்திலேயே இருந்து விட்டாலென்ன?

இது மாத்திரமா? பார்லிமெண்டு தலைவருக்கும் திடீரென்று பெரிய மாளிகையை பல லட்சக் கணக்கில் அரசாங்கம் வாங்கப் போகிறது. இவ்விருவருக்கும் அரை லட்சம் ரூபாய் செலவில் இரண்டு கார்கள் வாங்கப்பட்டிருக்கிறது. இதேபோன்று பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு சுகசௌகரியங்களும் வினோதக் களியாட்ட வசதிகளுமுடைய மாளிகை பெறுவதற்கு பத்து லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும். இவையெல்லாம் பார்லிமெண்டுக்கு தெரியாமல் செலவு செய்யப்படும் வேலைகளில் சிலவாகும்.

எந்தச் செலவுகளுக்கும் ஒரு வரையறையுண்டு. எனினும் மேற்படி டாம்பீகச் செலவுகளை யோசிக்கும்போது, மிகவும் சிக்கனமாகச் செய்யக்கூடியவற்றிற்கு கண்மூடித்தனமாக பொதுப் பணம் நாசம் பண்ணப்படுகிறதென்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. இந்நிலைமையில் தனதமது சுகலாபங்களைக் கவனித்துக்கொள்ளுகிறார்களையொழிய, தேச மக்களுக்கு ஆகமபரித்தியாகத்தோடு தொண்டு செய்யும் நோக்கம் இல்லையென்றே தெரிகிறது.

* * *

"லங்காதீப" இம்ருயி எழுதுவது

பணமக்கள் தலைநிமிர்ந்து மாற்றிக்கொண்ட பின், பெற்றுவிபாண நடவடிக்கைகளைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவர்கள். அதே போன்று பார்லிமெண்டு அங்கத்தினர்கள் தொழுவசெய்யப்பட்டதிலிருந்து அடுத்த நாலு ஐந்து மாதங்களில் கிடைக்கப்படும் சுராஜ்யகதை-டொமினியனை-பற்றி எங்கள் தலைவர்கள் எல்லோரும் இங்கிருந்து அரசாங்கமும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். பிரதமரை மோரிஷிற்கு தங்கபுலம் பூசியபின் தங்கமேதரம்தான் என்று சொல்வதைப்போலத்தான், லங்கா 'சுராஜ்யக் கதையுமென்று யாருக்குத்தான் சொல்ல முடியாது? எனினும், ஊர் முழுவதும் தலைசாற்றி திருவிழாவுக்கு-உற்சவங்கள் கொண்டாடுவதற்கும்-கலியாண விருந்து நடத்துவதற்கும்-அன்றைக்கு உபர்த்துப்கொடியைப்பற்றி முடிக்கொள்ளுவதற்கும் வட இந்தியாவிலிருந்து அரசகுமாரனை வரவழைத்து முடிசூடுவதற்கும்-அவளுக்கான திட்டுடல் பணணுவதற்குமான சுயாதீனம் மூன்று மாதத்திலல்ல, முந்நூறு மாதத்திலாவது கிடைக்குமென்கிற நம்பிக்கையான அறிகுறி இன்னும் தென்படவில்லை.

* * *

கொடுங்கோலாட்சிதான் இங்கேயும்

சுதந்திரம் என்றால் இங்கிலாந்து அரசாங்கத்திடம் அபிமானமும் உவப்புமுடைய சிலருக்கு ராஜபோகங்களைப் பெற்று சௌபாக்கியமாக வாழ சந்தர்ப்பம் கிடைப்பதானால்-முற்காலத்திலே கொடுங்கோல் மன்னரின் கீழ் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையும் சுதந்திரமானால்-ஐந்துபேர் பேசுகிறபாவையில் 95 பேர் ஆட்புரிவதும் சுதந்திரமானால்-உண்மையிலே அப்படியான சுதந்திரம் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் இங்கேயும் காண முடியுமென்பது நிச்சயம்.

தெரியாத்தனம்

சுதந்திரமென்று சொல்லுவதானால் தேசத்தின் பொருளாதார தொழில் துறைகளையும் மற்றும் அத்தியாவசியமான வற்றையும் அபிவிருத்திசெய்து மக்களின் வாழ்க்கையை பண்படுத்த, தேசமக்களின் பாவையிலே அரசாங்க விவகாரங்களை நடத்தக்கூடியதான அறிகுறி இன்னுமதென்பதாகவிலலையே உண்மை இப்படியிருக்க எங்கள் பார்லிமெண்டு தலைவர்கள் இங்கிலாந்து பார்லிமண்டு தலைவர்களின் வேஷங்களை அணிந்துகொள்ள முயற்சிப்பது தெரியாத்தனமே.

நவீன பராக்கிரம பாகு

உலகத்திலேயே பாதியளவு பூமிப்பிரதேசத்தில் நிர்வாகப் பொறுப்பைக் கொண்டுள்ள இங்கிலாந்து பார்லிமெண்டு தொழில் துறையில் உலகத்திலே முதல் ஸ்தானம் வகிப்பதும் நாலரைக் கோடி மக்களைக் கொண்டதுமான இங்கிலாந்து. அப்படியான கிரேட் பிரிட்டனை இலங்கையோடு ஒப்பிடுவது, மகா பராக்கிரம பாகுவுடன் எங்கள் மாதிரியை ஒப்பிடுவதைப்போன்றதாகும்.

அவ்வளவு பிரமாண்டமான இங்கிலாந்துக்கு பதினெட்டு மந்திரிகள்தான் இருக்கிறார்கள் எனினும் மற்றவர்களின் விளக்கிய வெளிச்சம் பார்க்கும் எங்கள் பார்லிமெண்டில் பதினாலு மந்திரிகள் இருக்கிறார்கள். இது மாத்திரமா? இவர்களுக்கு

மொராக்கோவின் சுதந்திரம்

ஐ. நா. சபைக்கு மகஜர்

லேக்ஸக்ஸஸ், (நியூயார்க்) நவ 8

மொராக்கோ சுதந்திர இயக்கம் ஐ. நா. சபைக்கு 24 பக்கம் அடங்கிய ஒரு மகஜரைச் சமர்ப்பித்துள்ளது. இதிலபாலிஷ், பிரெஞ்சு மொராக்கோ பகுதிகளின் பிரச்னைகளைப்பற்றி எடுத்துக்காட்டியுள்ளது. குறைந்தது 25 குற்றச்சாட்டுகள் பிரெஞ்சு சர்க்கார் மீது இதில் கூறப்பட்டுள்ளது.

மொராக்கோ தேசிய வாதிகளின் கோரிக்கைகள் பின்வருமாறு:-

ஸ்பானிஷ் மொராக்கோ பிரச்னை ஸ்பானிஷ் பிரச்னையோடு சேர்த்துக் கவனிக்கப்பட வேண்டும்.

மொராக்கோ தேசிய சுதந்திர இயக்கத் தலைவர்கள் ஐ. நா. சபைக்கு முன் தோன்றி பேசுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

அல்ஜிரேஸ் சட்டப்படி மொராக்கோவின் சுதந்திரமும் அங்கீகரிக்கப்பட்டதை அதில் கையொப்பமிட்ட ஆதேசங்கள் ஐ. நா. சபையின் அங்கத்தினராய் விளங்குவதாக அச்சட்டத்தை ஐ. நா. சபையால் அமுல் நடத்த வேண்டும்.

மேற்குறித்த மொராக்கோ சுதந்திரப் பிரச்னையை பரிசீலிக்க தூதுக் கோஷ்டித் தலைவர் ஸர். ஸப்ருல்லா கான் அரசியல் கமிட்டியில் கிளப்பலாமென்று அறியப்படுகின்றது. (ராய்ட்டர்)

காணி அபிவிருத்தி ஆலோசனைச் சபை

கொழும்பு, நவ 8

இலங்கையின் காணி அபிவிருத்திக்கான தேசிய திட்டமொன்றை வகுக்கும் அதிகாரிகளுக்கு உதவும் முகமாக மத்திய நிர்மாணக் கமிஷனின் முதல் ஆலோசனைக் கூட்டம் நாளைமறுதினம் 12-ம் தேதிக்கு வைக்கப்பட்டுள்ளது. தேசியத் திட்டம் அல்லது கொள்கையை தயாரிக்கும்போது இலங்கையின் காணிகளை அபிவிருத்தி செய்வது, உபயோகத்துக்கு எடுத்துக் கொள்வது முதலானவைகளைப்பற்றி இக் கமிஷன் தெளிவுபடுத்த வேண்டியிருக்கும். இதில் அநேக பிரமுகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பார்லிமெண்டு காரியதரிசிகள் அல்லது உதவி மந்திரிகள் பதினைந்து பேர், நிரந்தரக் காரியதரிசிகள் பதினைந்து பேர், சொந்தக் காரியதரிசிகள் பதினைந்து பேர், பிரதம லிகிதர்கள் பதினைந்து பேர், மற்றபடி இவர்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் தங்கியகுமாஸதாக்கள் இலாகா என்றெல்லாம் இல்லாத பதவிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும் உதவி மந்திரிகளை நியமிப்பதற்கு யோசித்திருப்பதாகத் தெரிகிறது. இப்படியெல்லாம் பார்க்கும்போது மந்திரிகள் சபையின் நிர்வாகத்திற்கு விடும் எத்தனையோ கோடி ரூபாய்கள் வேண்டியிருக்கும்? இலங்கையைப் போன்ற ஏழை தேசத்திற்கு இவ்வளவு பெரிய பாரத்தை தாங்க முடியாதென்று பொது மக்கள் முணுமுணுப்பதில் என்ன தப்பு?

கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

இங்கிலாந்தைப் போன்ற பலம் பொருந்திய தேசத்திற்கு பதினெட்டு மந்திரிகள் போதுமென்றால், இன்னும் அடிமைத்தளையில் பணிக்கப்படாத இலங்கைக்கு ஏழு மந்திரிகள் தருதியாகப் போதுமென்றால் தொழிலுலகத்தில் முதல் ஸ்தானம் பெற்று விளங்கும் இங்கிலாந்தைப் போன்று இங்கே செய்யப்போகும் பிரமாண்டமான பிரச்னைகள் என்ன? இவையெல்லாம் எப்படி உண்டாகியது? இன்று வரையும் இலங்கை மக்கள் புண்ணியம் செய்யாதிருந்ததின் சாபத்தீடா இவை? பிரதம மந்திரியார் எங்களுக்கு கலியாணம் செய்வைக்கும் 'சுயராஜ்ய' பணமகளின் ஸ்ரீதனம் இவையானால் கடவுளே எமமைக் காப்பாற்றியருளுக!

கொட்டாஞ்சேனை கொலை

சமையல்காரப் பெண் சாட்சியம்

கொழும்பு, நவ 9

கொட்டாஞ்சேனையில் காலஞ் சென்ற திருவிழாவுக்கு வந்த ஜெயவல் இருக்கும் முனிசிபல் சபை வருமான வரி இன்ஸ்பெக்டர் திரு. ஜி. டி. செல்வா செனவிரத்தினா (54 வயது) கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக நுகெகொடையைச் சேர்ந்த கே. ஏ. தர்மசேனா என்பவர் கைது செய்யப்பட்டு நேற்று பிரதம மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணை நடைபெற்றது. திரு. செனிவிரத்தினாவின் மனைவி ஒரு ஆசிரியையென்றும் அவர் தமது இரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றதாகவும் வீட்டில் திரு. செனிவிரத்தனாவும் பணிப்பெண் அலிஸ நோனாவும் மட்டுமிருந்ததாகவும் கூறப்பட்டது. வீட்டில் இருந்த பணிப்பெண் வர்க்கெட்டுக்குச் சென்றபோது வீட்டில் திரு. செனிவிரத்தனா கொலை செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. விபத்து நடந்த இடத்திற்கு போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திருநாகூர், அலுவிகாரா, சூபிரண்டன்ட் திரு ஜி. எச். ரொபிஸன், திரு. எல். ஸி. சிங்காரவேலு ஆகியவர்கள் விஜயம் செய்துள்ளனர்.

கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்படுமுன் தற்காலிக பிரதம நீதிபதி திரு. வி. டி. பண்டித குணவர்தனாவிடம் பிரதிவாதி தர்மசேனா என்பவரை இக் கொலை நடந்த பகுதியிலிருந்து பல சாட்சிகள் தெரிவிக்கின்றனர் என்று போலீஸாரும் அதிகாரிகளும் தெரிவித்தனர். ஆள் இனம் சண்டுக்கும் அணிவகுப்பு நடந்தபோது எல்லா சாட்சிகளும் தர்மசேனாவையே சுட்டிக்காட்டினர். அதன் பிறகு திரு. செனிவிரத்தினாவைக் கொலை செய்ததாக தர்மசேனா மீது திரு. பி. டபிள்யூ. பெரேரா (இரகசியப் போலிஸ் உதவி சூபிரண்டெண்ட்) குற்றச்சாட்டி விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

காலஞ்சென்ற திரு. செனிவிரத்தினாவின் வீட்டில் சமையற்காரியாக இருக்கும் அலிஸ நோனா சாட்சியளிக்கையில் கூறியதாவது:-

நான் வேலை செய்யும் வீட்டில் இரண்டு குடும்பங்கள் இருக்கின்றன. ஒரு பகுதியிலாலஞ்சென்றவரும் அவரது மனைவியும் இரு பிள்ளைகளுமிருக்கின்றனர். மற்றப் பகுதியில் ஒரு பாங்கிக்காரர் குடும்பமிருக்கிறது. ஸ்ரீமதி செனிவிரத்தினா ஒரு பாடசாலை ஆசிரியையானதால் வாரநாட்களில் தமது இரு பிள்ளைகளையும் அவர் அழைத்துக்கொண்டு பாடசாலைக்குச் சென்றுவிடுவது வழக்கம். பகலில் திரு. செனிவிரத்தனாவும் நானுமே வீட்டில் இருப்போம். அநேகமாக திரு. செனிவிரத்தினா வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கக் மார்க்கெட்டிற்குச் செல்லுவது வழக்கம்.

இந்தக் கொலை சம்பவம் நடந்ததிற்கு முதல் தினம் ஸ்ரீமதி செனிவிரத்தினா நுவரகாடையில் இருந்த அவரது தாயாருடைய வீட்டுக்குச் சென்றார். நானும் உடன் சென்றிருந்தேன். திருப்பி வருகையில் எதிரியின் வீட்டிற்குச் சென்று எதிரியை "பாஸ்" என்று அழைத்து அவருடன் ஸ்ரீமதி செனிவிரத்தினா பேசிக் கொண்டிருந்தார். நான் வெளியில் வராந்தையில் இருந்ததால் அவர்கள் பேசியது என்னவென்று எனக்குத் தெரியாது. அன்று ஸ்ரீமதி செனிவிரத்தினா என்னிடம் எதிரி தாமசேனா மறுநாள் வீட்டுக்கு வருவாரென்றும் அவர் அங்கு வருமபோது நான் அங்கு நிற்கப்படாதென்றும் மார்க்கெட்டுக்குப் போய்விட வேண்டுமென்றும் கூறினார்.

கொலை நடந்த அன்று காலை ஸ்ரீமதி செனிவிரத்தினா (வெள்ளிக்கிழமை மகாலை) தமது பிள்ளைகளுடன் பாடசாலைக்குச் சென்றுவிட்டார். திரு செனிவிரத்தினாவும் மார்க்கெட்டுக்குச் சென்றுவிட்டார், எதிரி அங்கு வந்து திரு. செனிவிரத்தினா எங்கே என்று என்னைக் கேட்டார். அவர் மார்க்கெட்டுக்குப் போய்விட்டதாக நான் கூறினேன், எதிரி என்னை வீட்டை விட்டு வெளியே செல்லுமாறு கூறினார் வீட்டில் எஜமான் இல்லாதபோது நான் வெளியேற முடியாதென்று கூறி மறுத்துவிட்டேன் பின்னர் எதிரி மேலும் மேலும் வற்றுறுத்தியதால் நான் மார்க்கெட்டுக்குச் சென்றேன்.

மார்க்கெட்டில் சில பொருட்களை வாங்கிக் கொண்டு போலீஸ் எடேஷன் பக்கமாக வரும்பொழுது ஸ்ரீமதி செனிவிரத்தினா அங்கருப்பதைக் கண்டேன் கொலைச் சம்பவம்பற்றி ஸ்ரீமதி செனிவிரத்தினாதான் தெரிவித்தார். போலிஸில் ஸ்ரீமதி செனிவிரத்தினா அறிக்கை கொடுத்ததும் நான் அவருடன் வீட்டுக்கு வந்தேன். வீட்டிலே திரு. செனிவிரத்தனா தலையில் பல வெட்டுக்காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்ததைக் கண்டேன்"

எதிரியை ரிமாண்டில் வைக்குமபடி உத்தரவிட்டு விடுமேற்கொண்டு விசாரணையை மாஜிஸ்டிரேட் ஒத்தி வைத்தார்.

இந்தின நிபுணர் ஐரோப்பா பிரயாணம்

கொழும்பு, நவ. 9

இலங்கையிலுள்ள இரத்தினப் பரீட்சை நிபுணர் திரு. சார்தா ரத்னவீரா விமான மார்க்கமாக இன்று ஐரோப்பாவுக்கு செல்கின்றார். அங்கு இவர் இரத்தின வாத்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பிரதிநிதிகள் முதலானவர்களைச் சந்திப்பார். இவருடன் இவருடைய மனைவியும் தகப்பனாரும் உடன் செலகின்றனர்.

மார்ஷல் திட்டம் பற்றிய அறிக்கை

வாஷிங்டன், நவ 8

ஐரோப்பாவுக்கு உதவி அளிக்கும் மார்ஷல் திட்டம்பற்றி அறிக்கை சமர்ப்பிக்க அவேரல் ஹரிமான் தலைமையில் 19 பேர் கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டிருந்தது. இக் கமிட்டி தனது அறிக்கையை ஜனாதிபதி ருபனிடம் சமர்ப்பித்துவிட்டதாகவும் இந்த திட்டம் பற்றிய அறிக்கை ஞாயிற்றுக்கிழமை பகிரங்கப்படுமென்றும் கூறப்படுகிறது. [ராய்ட்டர்]

தோட்டசூப்பிரண்டிடமிருந்து ரூ. 12,000 கொள்ளை

களுத்துறை, நவ 9

வோகன் எஸ்டேட் சூப்பிரண்டெண்ட் திரு ஜே. டி. பார்குஹார்சன் என்பவர் எஸ்டேட் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க காரில் ரூ 12,000 எடுத்துச் சென்ற இடத்தில் அப்பணம் வழியில் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதென்று கூறப்படுகிறது. கடுகன்னாவை எஸ்டேட் ரஸ்தாவின் குறுக்கே மரக்கட்டையொன்று போடப்பட்டிருந்ததாகவும் அதன் அருகே நின்ற நபரொருவரை அதனை விலக்கும்படி சூப்பிரண்டெண்ட் கேட்டதாகவும் அப்போது அந் நபர் மிளகுத்தூளை சூபிரண்டெண்டின் முகத்தில் வீசியதாகவும் பின்னர் நான்கு அல்லது ஐந்து பேர்களாக காரில் இருந்த பணப்பையைக் கொள்ளையடித்துச் சென்று விட்டதாகவும் அறியப்படுகிறது. போலிஸார் பல விசாரணை நடத்துகின்றனர்.

ராயல் ஆசிய சங்க கூட்டம்

புதிய கட்டிடம் அவசியம்

கொழும்பு, நவ 9

கொழும்பு கார்சி சாலையிலுள்ள மண்டபத்தில் எர் சார்ள்ஸ் காலின்ஸ் தலைமையில் ராயல் ஆசிய சங்கத்தின் கூட்டமொன்று நடைபெற்றது. இச்சங்கத்திற்கு புதிய கட்டிடமொன்றை அமைக்க நிதி சேர்க்கப்படவேண்டுமென்று அவர் கூறினார்.

ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் கவர்னர்கள்

லண்டனில் மகாநாடு

லண்டன், நவ. 8

இன்று லண்டனில் ஆப்பிரிக்காவிலுள்ள கவர்னர்கள் மத்திலாவது மகாநாடடை குடியேற்ற நாடடு மந்திரி கிரீச் ஜோன்ஸ் ஆரம்பித்து வைத்தார். இம் மகாநாடு அந்தரங்கமாக இரு வாரங்கள் நடைபெறும். ஆப்பிரிக்காவின் அரசியல், சிவாக, பொருளாதார, சமூக நிலைமைகள்பற்றி ஆலோசனை நடைபெறும். ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் கவர்னர்களும் இம் மகாநாடடில் கலந்துகொள்கின்றனர் நைஜீரியா கவர்னர் லாடு மில்வர்டன், மகாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார். குடியேற்ற நாடடு மந்திரியின் பிரசங்கத்திற்குப் பதிலளித்தார். அடுத்த வருடம் லண்டனில் பெரியதோர் ஆப்பிரிக்க மகாநாடு நடைபெறும். அதற்கு ஆப்பிரிக்க பிரதேசங்களின் பிரதிநிதிகள் பலர் வருவர் அம் மகாநாட்டிற்குப் பூர்வாங்கமாக இம்மகாநாடு நடைபெறுகிறது (ராய்ட்டர்)

பிரிட்டிஷ் பாராளுமன்ற கமிஷன

கொரியா, நவ 8

டோக்கியோவிலிருந்து சியெயல் வந்து சேர்ந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற மிஷன் அங்கத்தினர் மூவரும் லெப்டினன்ட் ஜெனரல் சார்ள்ஸ் எச். கைட்னரும் ஷாங்கைக்கு நேற்று காலை புறப்படுவிடனர்.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும்
தும்பால் செய்யப்பட்ட சாமான்களும்
நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்
ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த
நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை வடம், சுக்கிலிந்தடி,
தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி
இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு நிறம் லங்கா பிராண்ட் வினாகரியும்,
கை பேக்ஸ்களும் கிடைக்கும்

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை
வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு
விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota.
No 44, Wolfendahl Street.
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு.
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் விற்பனை

நாவக்குளி இறை கோயிலுக்கண்டியில் திறம் நெல் வயல் பரப்பு 66. விரும்பியோர்க்கு சிறு பகுதிகளாகவும் கொடுக்கப்படும். விபரம்:- 20, அம்மன் ரோட், யாழ்ப்பாணம்.

எட்டுத் திக்கும் முருகோட்ட
வெளிவந்துவிட்டது

-: அமரகவி :-

கவி பாரதி நினைவு
மலர்க் கோர்வை

தீபாவளி மலர்

விபரங்களுக்கு:-

ஆண்டு சந்தாவிற்கு:-
பாரதி பப்ளிஷிங் ஹவுஸ்,
171, முகாந்திரம் ரோடு,
கொள்ளுபிட்டிய, கொழும்பு,

இலங்கை விற்பனையாளர்:-
கள்ளிக்குளம் ஸ்டோர்ஸ்
யூனியன் பிளேஸ், கொழும்பு.

மீன்பிடி தொழில் அபிவிருத்தி

வர்த்தகத்திற்கு புதிய சபை

மந்திரியிடம் மகஜர் சமர்ப் பணம்

கொழும்பு, நவ. 8

மீன்பிடி தொழில் முற்றாக அபிவிருத்தியைப் தற்கான வழிகளைச் சிபார்சு செய்யும் மகஜர் ஒன்று கைத்தொழில், கைத்தொழிலாராய்ச்சி, மீன் பிடி பகுதி மந்திரி திரு. ஜி. ஈ டி சில்வாவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரசுகளைப் பற்றி ஆலோசனை செய்யப்படுவதாக தெரிகிறது. இம்மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி விடுத்துள்ள அறிக்கை யொன்றில் இச்சிபார்சுகளைப்பற்றி ஆலோசிக்கப்படுவதால் அவைகளை சர்க்கார் தங்கள் கொள்கையாக ஏற்றுள்ளதெனக் குறிக்க மாட்டாதென்று தெரிவித்துள்ளார்.

மீன்பிடி தொழில் ஒரு ஆராய்ச்சி பகுதியை அங்குராரர்பணம் செய்யவேண்டுமென்பதே முதல் சிபார்சாகும். ஆராய்ச்சிப் பகுதியை உடனடியாக ஆரம்பித்து வேலை நடத்தப்பட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. மீன்பிடியாளர்கள் தங்கள் சொந்த கூட்டுறவு முறையில் மீன் வர்த்தகத்தை நடத்தும் வரையும் மீன் வர்த்தக சபையினால் குறிப்பிடப்பட்ட படி சர்க்கார் கூட்டுறவு முறையில் நடத்தக் கூடிய முறைகளை அழுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

சர்ககார் மீன் வர்த்தகத்தை எடுப்பதானால் முடிவில் இது தேசீயமயமாக்கப்படுவதில் கஷ்டமாகயிருக்கமாட்டாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன் வர்த்தகத்திற்கு புதிய சர்ககார் வர்த்தக ஸ்தாபனமொன்றை கூட்டுறவு முறையில் அமைக்க வேணடுமென்றும் அச் சபை இவ்வர்தகத்தை தேசீய மயமாக்கப் படுவதையும் தனிப்பட்டவர்கள் முயற்சியையும் பாதிக்காத முறையில் நடக்க வேண்டுமென்றும அச் சபை அமைப்பு பற்றியும் மகஜரில் சிபார்சு செய்யப்பட்டுளளது. இப்பொழுதுள்ள மீன் வர்த்தக முறை நஷடததில நடப்பதாகவும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

விக்டோரியா மாகாணத் தேர்தல்

லிபரல் கட்சிக்கு வெற்றி

மெல்போர்ன், நவ. 8

விக்டோரியா மாகாணத்தில் நடைபெற்ற தேர்தல்களின் வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. தொழற்கட்சி சர்க்கார் 14 அல்லது 15 ஸதானங்களை இழப்பார்கள் என்று தெரிகிறது. லிபரல் கட்சிக்கு வெற்றி கிடைத்து வருவதை நோக்குமிடத்து லிபரல் கட்சி சர்ககார் நிறுவப்படுமென்று தெரிகிறது. ஆஸதிரேலிய தொழிற்கடசி சர்க்கார் பாங்குகளை தேசிய மயமாக்கும் பிரச்னை மீது தேர்தல் நடைபெற்றது

(ராய்ட்டர்)

சீனப்பட்டங்கி, காசிஜரிகை ஆடை, இலங்கை ரத்தினம்

எலிஸபெத் இளவரசிக் கலியாணப் பரிசுகள்

செக்கோ கவிராயர் அனுப்பும் குழந்தை தாலாட்டுப் பாடல்

முதன் மந்திரியின் மூத்த குமாரிக்கு எளிமையான முறையில் விவாகம்

லண்டன், நவ 8

இளவரசு எலிஸபெத இளவரசியின் கலியாணப் பரிசுகள் வந்து குவியும் பூச் சித்திர வேலைப்பாடுள்ள மாலை அணியும் உடையான சீனப்பட்டங்கி வருகிறது. செக்கோஸலவேகியா கவிராயர் திரு. ஸடுவரா தாலாட்டுப் பாடல ஒன்று எழுதி அனுப்பிவைக்கிறார். இப்பொழுது சீனத்தில் சுற்றுப் பிரயாணஞ்செய்யும் பிரிட்டிஷ் தூதுக்காஷ்டியார் திங்கட் கிழமை நாங்கிங்கிலிருந்து இங்கு புறப்பட்டு வரும்போது, ஷாங்கை உடை நிபுணர்கள் தயாரித்த சீனப் பட்டங்கிகளை எடுத்து வருவார்கள், ஸடிரிட்டூரா பெஹிமியர்கள் செக்கோ கவிராயர் எழுதிய தாலாட்டுப் பாடலை சக்கோ தேசீயக் கொடி வர்ணங்களால் தீட்டப்பட்ட முக அட்டையுள்ள புஸதக வடிவில் அனுப்பி வைக்கிறார்கள். இந்தியா காசியில் நெய்யப்பட்ட ஜரிகை உடைகளை அனுப்பிவைகிறது. மொரிஷியஸ தீவு வாசிகள் தங்கம் பதித்த ஆமை ஓட்டுச் சீப்பு, கண்ணாடி முதலிய டாய்லட பெட்டி ஒன்றை அனுப்பிவைக்கிறார்கள்.

இளவரசி கலியாணத்திற்கு விஜயம் செய்யும்பொருட்டு தென் ரொடேஷியா பிரதம மந்திரிஸர். ஹகின்சும் அவரது மனைவியாரும் விமான மார்க்கமாக திங்கடகிழமையன்று லண்டனுக்குப் புறபபட்டு வருகிறார்கள்.

ருமேனியா மன்னர் மைக்கேலும் அவரது தாயாரான ஹெலன் மகாராணியாரும் நவம்பர் 15-ம் தேதி பாரிசுக்கு வந்து அங்கிருந்து கடல் மார்க்கமாக லண்டன் வருவார்கள்.

கலியாணதினத்தன்றுகிளாஸடச் கோமகள 'ஐஸடஸ்ரூ கிரேப சில்க்' அங்கியும 'ஹைலோ ஹேட்டும்' அணிந்திருப்பார்.

போர்ச்சுகல் சர்க்கார் கையால் செய்யப்பட்ட வெள்ளிப் பாத்திரமொன்றை கலியாணப் பரிசாக அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

கிரீஸ தலைநகரான ஏதென்ஸ நகர சபையார் கி. மு 4-வது நூற்றாண்டில் செய்யப்பட்ட ஒரு சிலையும் இரு பேழைகளும் அனுப்பிவைகக்கிறார்கள் கடல் கடந்தோர் சங்கததார் தென்னாப்பிரிக்க வைரததால் செய்யபபட்ட 'கிளிப்', இலங்கை ரத்தினக் கற்கள், பர்மா சிவப்புக் கற்கள், கானடா பிளாடினம், பிரிட்டிஷ் ஹாண்டுராவெள்ளிப் பேழை ஆகியவைகளை அனுப்பிவைக்கிறார்கள்.

பிரதம மந்திரி புத்திரிக்கு கலியாணம்

லண்டன், நவ 8

பிரிட்டிஷ் பிரதமர் அடலியின் மூத்த புத்திரி ஜேனட்டுக்கும் எஞ்சினீயர் திரு. ஹாரபால்டு ஷிட்டனுக்கும் நவபபர் 15-ம் தேதியன்று எலலஸபரோ என்னும் ஒரு சிறு கிராமததிலிருக்கும் ஒரு நாட்டுப் புற தேவாலயத்தில் விவாகம் நடைபெறும். கலியாணதிற்கு ஜேனட் ஒரு 'ரெடிமேட்' உடையும் 'செகண்ட் ஹான்ட்' முகப் போர்வையும் அணிந்து கொள்வார். பிரிஸ்டலிலுள்ள பைததியக்கார ஆஸ்பதரியில் அவர் நரம்பு சாஸதிர உதவிநிபுணராக வேலைபார்தது வருகிறார். இத்தம்பதிகள் பிரிஸடல் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் மூளைப் பரிசோதனைக் கருவி மூலம் ஆராய்ச்சி நடத்தும்போது ஒருவரையொருவர் சந்தித்துக் காதல்கொண்டனர். அந்த ஆஸ்பதிரியிலுள்ள ஒரே அறையும் ஒரு சமையலறையுமுள்ள வாசஸதலததில் இத்தம்பதிகள் திருமணத்திற்குப் பின் இரண்டே வாரங்கள் உல்லாச வாழ்க்கை நடத்தவர். இரண்டு வாரங்கள் கழிந்ததும் இருவரும் தத்தம் உத்தயோகங்களுக்குத் திரும்பிவ்டுவர். கலியாணமாப்பிளளைக்கு வயது 26 மாபிள்ளை மிகவும் கெட்டிக்காரரும் வெட்கமுள்ளவராகவுமிருப்பதாகவும் தன் மகளை அவர் மீது உண்மையான காதல் கொண்டிருக்கிறாள் எனறும் ஸ்ரீமதி அட்லி கூறுகிறார்

கிரீஸ மன்னர் தேக அசௌக்கியம்

ஏதென்ஸ, நவ 8

கிரீஸ மன்னர் பால் விவஜுரத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார். நோய் அபாயகரமானதென்று வைத்தியர்கள் அபிபிராயப்படுகிறார்கள்.

(ராய்ட்டர்)

பாலஸ்தீன பிரச்னை

பிரிட்டன் கருத்தை அறிய அமெரிக்க ஆவல்

ஆஸதிரேலிய அந்நிய நாட்டு மந்திரியின் முயற்சி

லண்டன், நவ 8

பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி கிரீச் ஜோன்ஸ ஐக்கிய தேச அசெம்பிளிக் கூட்டத்திற்கலந்து நியூயார்க்கிலிருந்து இங்கு வந்ததும் நேற்று அவர் மந்திரி சபையைச் சந்தித்து அசெம்பிளி நடவடிக்கைபற்றி அறிக்கை சமர்ப்பித்தார் பாலஸதீன பிரிவினை பிரச்னை பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் கருத்தை விளக்கி ஒரு அறிக்கை அனுப்பும்படி அமெரிக்க சர்க்கார் கேட்டிருந்தனர் அது சம்பந்தமாக இன்று பிரதமர் திரு கிரீச் ஜோன்ஸ பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி பெவினைச் சந்தித்துப் பேசினார் அமெரிக்க சமரசத் திட்டத்தை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று தெரிகிறது.

ஆஸதிரேலியாவின் முயற்சி

நியூயார்க், நவ 8

அடுத்த வாரத்தில் எப்படியும் பாலஸதீன பிரச்னை சம்பந்தமாக இறுதியான முடிவு செய்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் ஆஸதிரேலிய அந்நிய நாட்டு மந்திரி முயற்சித்து வருகிறார். இதற்காக அவர் எலிஸபெத் இளவரசி கலியாணத்திற்கு லண்டனுக்கு விஜயம்செய்வதை ரத்து செய்துவிட்டார். ஐக்கியதேச பாலஸதீன கமிட்டி வேலையிலேயே ஈடுபட்டிருக்கிறார். செவ்வாய்க்கிழமை காலை 57 நாடுகளின் பிரதிநிதிகளையும்அழைத்து இறுதியான முடிவு ஏற்பட்ட பிறகே கூட்டத்தை கலைப்பது என்று முடிவு செய்திருக்கிறார். இரு சப் கமிட்டிகளின் அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(ராய்ட்டர்)

லூயிஸியானாவில் சூறைக் காற்று

4 பேர் மரணம் 20 பேர் காயம்

லூயிஸியானா, நவ. 9

லூயிஸியானாவிலும் மேற்கு டெக்ஸாஸிலும் நேற்று மூன்தினம் சூறைக் காற்று வீசியதால் பல ஆயிரக் கணக்கான டாலர்கள் சொத்து சேதமடைந்ததாகவும் நான்கு பேர் கொலைப்பட்டதாகவும் 20 பேர் காயப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண திருச்சபை அதியட்சருக்கு பாராட்டு

சமூக நலன்களுக்காகவே அதிகாரம்

கொழும்பு, நவ. 9

கொழும்பு ஓப். எம். ஸி. ஏ மண்டபததில் டாக்டர் எஸ். எல். நவரததினம் தலைமையில் யாழ்ப்பாண திருச்சபை அததியட்சர் சங் எஸ் குலேந்திரன் அவர்களைப்பாராட்டும்முகமாக ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங். குலேந்திரன் பேசுகையில் பொறுப்புள்ள அரசாங்கத்தின் அமைப்பினால் இலங்கையிலுள்ள கிறிஸதவ சமூகம் பாதுகாப்பைப் பெற்றுள்ளதென்றும், சமீபகாலம் வரை கிறிஸதவ சமூகம் தேவையில்லாமல் வேறு முறையில் இருப்பதாக

நீதிபதி மீது பண மோசடிக் குற்றச்சாட்டு

மாடியிலிருந்து விழுந்து மாண்டார்

அட்லாண்டா, நவ. 8

ஜார்ஜியா என்ற அமெரிக்க மாகாணத்தின் பிரதான நீதிபதியும், நூரம்பர்க் யுத்தக் குற்றவாளிகள் வழக்குகளை விசாரணை செய்த நியாய விசாரணைக் கமிஷனில் நீதிபதியாக இருந்தவருமான திரு. சார்ல்ஸ் ரீட் மீது பண மோசம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட சில மணி நேரத்திற்குள் அவர் 12-வது மாடியிலுள்ள தனது காரியாலயத்திலிருந்து கீழே விழுந்து மாண்டார். 1946ல் மாண்ட எல்லா கிரிபத்தின் சொத்தை விணாக்கியதாக அவ மீது ஜார்ஜியா பாட்டிஸட் ஸழந்தைகள் அனுதை ஆசிரமத்தார் வழக்குத் தொடர்ந்திருந்தனர். அவரிடம் கையிருப்பு 2,720 டாலர் ரொக் மாகவும் 7,000 டாலர் கடன் பத்திரங்களாகவும் இக்க வேண்டுமென்றும் ஆனால் அவர் பாங்க்கணக்கில் 2,000 டாலர் மட்டுமே இருக்கிறதென்றும், அவரை ஒரு இலையல்வென்டாக்க வேண்டுமென்றும், மறையும் தொகைக்கு அவர் வகை சொல்ல வேண்டுமென்றும் மொக்காடப்பட்டது. எதிரி அமெரிக்கராணுவத்தில் சேர்ன்னாக இருந்திருக்கிறாரென்றும் சில மாதங்களாக அவர் சௌகரியமில்லை தூரப்பதாகவும் அவர் நண்பர் சாட்சி கூறினர். (ராய்ட்டர்)

ட எண்ண வேண்டியிருந்தாகவும் கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

சமீப காலம்வரை பாராட்டப்படக் கூடியதாகவோ அல்லது குற்றம் சாட்டப்படக் கூடியதாகவோ ஒரு அரசாங்கம் இருக்கவில்லை. முந்திய அரசாங்கத்தில் ஒரு விஷயத்தை பொறுப்பு யாரிடம் என்றால் மந்திரியிடம் என்பார்கள். மந்திரியைக் கேட்டால் அவர் கமிட்டியிடம் பொறுப்பென்பார். கமிட்டியினரைக் கேட்டால் அவர்கள் தாங்களும் பொறுப்பல்லவென்பர். மடியில் எல்லாம் வெறும் வெளியைத்தான் பார்க்கவேண்டும். ஆனால் இப்பொழுது அந்த நிலையில்லை. நாங்கள் இப்பொழுது பொறுப்புள்ள நிலையைக் வந்துவிட்டோமென நம்புகிறேன். அதிகாரிகள் பெரு நோக்குடன் விஷயங்களைக் கவனிப்பார்கள் என நம்புகிறேன். அதிகாரப் பரிசுத்தமானது அந்த அதிகாரத்தை பொறுப்பாக நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்கம் எல்லா சமூகத்தினரின் நலன்களுக்கும் ஏற்பவே அந்த அதிகாரத்தை உபயோகிக்க வேண்டும். மற்ற சமூகங்களுக்குள்ள உரிமை போன்றே நாங்களும் தேசசரில் பக்தியுடையவர்கள். ஏனைய சமூகத்தினர்களுக்கிருப்பது போன்ற எங்களுக்கும் பேச்சுச் சுதந்திரமும் மற்றும் சம உரிமைகளும் இருக்கவேண்டும்.

இக்கூட்டத்தில் சங் குலேந்திரன் யாழ்ப்பாண திருச்சபையின் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளதைப் பாராட்டி தலைவரும், திரு. எஸ் ஜே வி. செல்வநாயகம், லெப்டினன் கர்னல் எம். மாடேவிஸ், சங் ஏ. ஜே. கே பாக்கர், சங். ஜி. பி. ஜாக்ஸன், சங் எஸ். எவ் பெரேரா, சங். ஜே ஜி டபிள்யு ஹென்ட்ரி, ஸர் ஒலிவர் குணததிலகா சங். டி. ரி. நைல்ஸ், திரு. ஸி. சுந்தரலிங்கம் ஆகியோர் பேசினார்கள் டாக்டர் சார்ல்ஸ் ரதமனேசர் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கிங்ஸ்லியில் தீபாவளி விருந்து !

இலங்கை தமிழ் சினிமா ரசிகர்களுக்கு

வெல்லிங்டன் டாக்கி ஸர்க்யூட் அளிக்கப்போகும்

தீபாவளி திரைவிருந்து !

கன்னிகா

(உயரிய தமிழ்ப் பேசும் படம்)

உங்கள் உள்ளங் கவர்ந்த நடிகர்களான
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ மதுரம், டி ஈ வரதன் எம் எஸ். சரோஜினி,
எம். ஆர் சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் நிறம்பட நடித்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு மருதானை

புத்தம் புதிய படம்!!

இன்று காண்பிக்கப்படுவது!

மகத்தான 3-வது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சுவர்ணலதா-நஸீர் நிறம்பட நடிக்கும்

வாமிக் - அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்
பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்
முன் இடம் தேடுங்கள் !

ரப்பர் வர்த்தகத்துக்கு சர்க்கார் பண உதவி

தொடர்ந்து கிடைக்கலாம்

கொழும்பு, நவ, 9

இப்பொழுது ரப்பர் விலை சிறிது அதிகரித்திருக்கிறது. இதனால்ரப்பர்வர்த்தகத்திற்குச் சர்க்கார் அளித்து வந்த உதவிப் பணம் இப்பொழுது வெகுவாகக் குறைந்துவிட்டதென்று கூறப்படுகிறது. ரப்பர் விசாரணைக் கமிஷனின் சிபார்சுகளை அமுல் நடத்தும் வரையும் இந்த ரப்பர் வர்த்தகத்துக்கு சர்க்கார் அளிதது வரும் உதவிப் பணம் தொடர்ந்து கொடுக்கப்படும் என்று அறியப்படுகிறது ரப்பர் கமிஷனர் இலாகா மாதவீதம் சுமார் 4000 டன் ரப்பர் வாங்குகிறதென்று கூறப்படுகிறது

இப்பொழுது ரப்பர் விலை அதிகரிக்குமென்ற எண்ணத்துடன் சிலர் ரப்பரை பதுக்குவதாகவும் அதனால் ரப்பரின் விலையில் சிறிது ஏற்றம் ஏற்படக் கூடுமென்றும் ரப்பர் கமிஷனர் தெரிவிக்கின்றார். ரப்பர் வர்த்தகத்திற்குச் சர்க்கார் உதவிப் பணம் தொடர்ந்து கொடுக்கப்படுவதை வர்த்தக மந்திரி திரு ஸி. சுந்தரலிங்கம் அனுமதித்துள்ளதாக தெரிகிறது.

ஐரோப்பிய நாடுகளுக்கு மார்ஷல் திட்ட உதவி

முதல் வருடத்திற்கு 5,750,000,000 டாலர்கள்

வாஷிங்டன், நவ 9

மார்ஷல் திட்டத்தின் முதல் பிரிவுப்படி ஐரோப்பிய நாடுகளின் புனர் நிர்மானத்துக்கு பாரிஸில் நடந்த மகாநாட்டில் கலந்துகொண்ட பதினாறு நாடுகளுக்கும் அமெரிக்கா சுமார் 5,750,000,000 டாலர் கொடுக்க வேண்டுமென ஜனாதிபதி ட்ரூமனின் அயலநாடடு உதவிகமிட்டி சிபார்சு செய்துள்ளது மார்ஷல் திட்டத்தின்படி நான்கு வருடங்களுக்கும் அமெரிக்காவுக்கு 120 லட்சம் டாலர் வரை படிக்குமென்றும் கமிட்டி தெரிவித்துள்ளது. இத்திட்டத்தை நிர்வகித்து நடததுவதற்கு அமெரிக்க சர்க்காரின் ஸ்தாபனமொன்றை அமைக்கக் சிபார்சு செய்யப்படடுள்ளது.

இந்த அறிக்கையை பாராட்டிய ஜனாதிபதி ட்ரூமன், மேற்கு ஐரோபபாவிற்கு அமெரிக்காவின் உதவித் திட்டத்திற்கு இந்த அறிக்கை அதிக பயனளிக்குமென்றும் கமிட்டி அங்கததினர் திறமையான அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர் என்றும தெரிவித்துள்ளார்.

(ராய்ட்டர்)

மின்னேரியா அபிவிருத்தி

காடுகள் களனிகளாகின்றன

கொழும்பு, நவ. 8

இலங்கையில் டொனமூர் அரசியல் திட்டம் வருவதற்கு 29 வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட மினனேரியாத் திட்டம் வெற்றியடையவில்லை. பின்னர் டொனமூர் அரசியல் திட்ட காலததில் விவசாய மந்திரி திரு. சேனநாயக்காவின் தலைமையில் மீண்டும் இங்கு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இங்கு காடுகள அழிக்கப்பட்டு வயல்களாகவும் குடியிருப்பு இடங்களாகவும் மாற்றப்பட்ட இப்பகுதியில சுமார் 10,000 பேர் வரையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த காடுகள் அழிக்கப்பட்டு எடுத்த 6047 ஏக்கரில சுமார் 2650 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு பல வேலைகளும் நடைபெறுகின்றன. இப்பகுதிக்கு ரயில் போகுவரதது வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளது. மின்னேரியாப் பகுதியில் இன்னும் சுமார் 5000 ஏக்கர் நிலம் வரையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதற்கான திட்டங்களும் தயாராக இருப்பதாக கூறப்படுகிறது. மகாபராக்கிரமபாகு காலத்தில் மின்னேரியா எத்தகைய சிறப்புடன் இருந்ததோ அததகைய நிலையை மீண்டும் இப்பகுதி சிறிது சிறிதாக அடைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இத்தாலி குடியேற்ற நாடுகள்

ஆராய்ச்சி கமிஷன் பயணம்

லண்டன், நவ. 8

இத்தாலி குடியேற்ற நாடு சம்பந்தமாக நேரில் சுற்றுப்பிரயாணம செய்து ஆராய்வதற்காக 4 வலலரசுகளின் கமிஷன் இன்று காலை விமான மார்க்கமாக முதலாவது மால்டாவுக்குப் புறபபட்டுச் சென்றது. 1948 ஜூன் மாதம் வரை இந்த ஆராய்ச்சிக் கமிஷனின் சுற்றுப் பயணம் நடைபெறும்.

நவம்பர் 11-ம் தேதி எரிட்ரீக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்து நான்கு வல்லரசுகள் மகாநாட்டிற்கு தகவல் தெரிவிக்கும். இரண்டாவது இத்தாலி சோமாலிலந்துக்கு விஜயம் செய்யும். பிறகு திரிபோலிட்டானியாவுக்கும் ஸ்ரனேஷியாவுக்கும் விஜயம் செய்யும். (ராய்ட்டர்)

ஜெர்மன் சமாதான உடன்படிக்கை

நான்கு வல்லரசுகள் மகாநாடு

லண்டன், நவ 8

இன்று பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ, ரஷியா ஆகிய நான்கு வல்லரசுகளின் மகாநாடு ஜெர்மன் சமாதான உடன்படிக்கைபற்றி விவாதிததது. ஜெர்மன் சமாதான உடன்படிக்கை மகாநாட்டில் பாகிஸ்தானை ஒரு பிரதிநிதியாகச் சேர்ததுக்கொள்ள வேண்டுமென்று பிரிட்டன் கோரியது இதற்கு அமெரிக்கா ஒப்புக்கொண்டது. பிரான்சும் ரஷியாவும் தங்கள் அபிபிராயத்தை பின்னர் தெரிவிக்கும். இரண்டரை மணி நேரம் விவாதங்கள் நடைபெற்றன கீழ் கண்ட 4 விஷயங்களில் மகாநாடு இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை:-

1. அல்பானியாவுக்கு ஜெர்மன் சமாதான உடன்படிக்கை மகாநாடடில் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டுமென்றும் பிரான்சும் ரஷியாவும் கோரின. இதை பிரிட்டனும் அமெரிக்காவும் எதிர்த்தன.

2 சமாதான மகாநாட்டுக்கு முன்பு இப்பொழுதுள்ள ஜெர்மன் மததிய சர்க்கார் இருக்கவேண்டுமா என்ற பிரச்னை ஆலோசிக்கப்பட்டது. இபபொழுதுள்ள சர்க்கார் தங்கள் அபிபபிராயத்தை தெரிவிக்க வேண்டுமென்றும், சமாதான மகாநாடு கூடுவதற்கு முன்பு மக்கிய சர்க்கார் இருக்கவேண்டுமென்றும் ரஷியா வற்புறுததியது. மற்ற மூன்று நாடுகளும் சமாதான மகாநாட்டு முடிவுக்கு முன் எவ்வித மத்திய சர்க்காருடனும் சம்பந்தம் வைத்துகொளளக் கூடாதென கருதின.

3 சமாதான உடன்படிக்கை மகாநாட்டில் 55 நாடுகளும கலந்துகொள்ள வேண்டுமென்று அமெரிககா கோரியது. ஆனால் ரஷியாவோ யுத்ததில் ஈடுபட்ட 5 வல்லரசுகளும் இந்தியா உட்பட 18 நாடுகளும் மட்டுமே கலந்து கொள்ள வேண்டுமென்றும் சிலவி கலந்துகொள்ளக் கூடாதென்றும் தெரிவிததது. பிரிடடனும் பிரான்சும் பின்னர் அபிபபிராயம் தெரிவிக்கும்.

4 பாகிஸ்தான் பிரதிநிதித்துவம். (ராய்ட்டர்)

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 10உ இந்த பத்திரிகை 100A. தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிடடு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org